"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

பிரதி சனிக்கிழமை வெளிவரும்

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா * போராட்ட இதழ் * வெளி நாடு மூன்றணா.

மலர் 1 | சென்னை | 17—7—1954 | சனி | இதழ் 4

பெரியவர்கள் பெரியவர்கள்தான்!

சிறிசுகள் சிறிசுகள்தான்!

இது ரொம்பப் பரிதாபத்துக்குரிய வருடம். நல்ல மழை பெய்தும், வெய்யில் —இப்பொழுது— குறைந்திருந்தும் பலருடைய சிந்தையில் கொதிப்பு அடங்காமல் இருக்கிறது. உலகத்தை அனுதாபத்தோடு பார்ப்பவர்களின் கண்களுக்கு இது மிகவும் கவலையைத் தருகிறது. பகைவனும் வாழ வேண்டும் என்னும் பண்பாடுடைய திராவிடமகன், இந்தக் கொதிப்பு விரைவில் அடங்கி விடாதா என்று ஆசைப்படுகிறான். "பாவம், அவர்களுக்கு தாங்கள் என்ன செய்கிறோம் என்பதே தெரியவில்லை" என்று ஏசு சொன்னதைத்தான் திருப்பிச் சொல்ல வேண்டியவனாயிருக்கிறான்!

கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டு சிந்தித்துப் பார்த்தால் மனிதர்களிலே சிலர், காரணகாரிய மின்றிப் பேசுகிற பேச்சும், ஆடுகிற ஆட்டமும் நிழற்படம் போல நம் மனத்திரையில் ஓடி, ஆழ்ந்த அனுதாபத்தைக் கிளப்பும்! அடாடா 'என்ன ஆட்டம்' என்ன குதிப்பு! என்ன ஆர்ப்பாட்டம்! என்ன முழக்கம்! இத்தனைக்கும் பெரிய மனிதர்கள் இதில் தலையிடுவதில்லை: சின்னஞ் சிறிசுகள்தான் உயிரை வாங்குகின்றன!

* * *

காமராசர், தன்னை வந்து சந்தித்ததாக வேலூர் மாநாட்டில் அண்ணா கூறினார். இதைப்பற்றி தோழர் சிவஞானம், "காங்கிரஸின் மானமே போய் விட்டது. ஏன்சந்தித்தார்? எதற்காகசந்தித்தார்?" என்றெல்லாம் 'கவலை'ப் பட்டிருக்கிறார். காங்கிரஸில் உண்மையாகவே தியாகம் செய்த சிறந்த காங்கிரஸ்காரர்கள் இந்த சந்திப்பை தங்களுக்கு ஏற்பட்ட சிறப்பாகக் கருதுகிறார்கள். ஒரே ஒரு நாள் 'ரிமாண்'டில் சிப்பியேந்தி— சீரழிந்த — தோழர் ரொம்ப ரொம்ப கவலைப்படுகிறார்! காமராசரால், காங்கிரசிலிருந்து துரத்தப்பட்ட பின்பும், "நான் காங்கிரஸ்காரன்" என்று பரிதாபத் தொனியிலே கூறும் போது இவர் மானம் போகவே இல்லை — "என்னை காங்கிரஸ்காரர்கள் மதிக்கமாட்டேன் என்கிறார்கள்" என்று கண்ணீர் வடித்த போதும் இவர் மானம் பத்திரமாகத்தான் இருந்தது! காமராஜர் அண்ணாத்துரையை சந்தித்ததால் காங்கிரஸின் மானமே போய் விட்டதாம்!

* * *

உண்மை பலபேருக்குப் புரியும் — இந் நாட்டில் பல பேர், தெரிந்தோ தெரியாமலோ, தாங்கள் அண்ணாத்துரைக்கு சமம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் அவரைக் காட்டிலும் தாங்கள் புத்திசாலி என்று நினைத்து, பகிரங்கமாக சொல்லிக் கொள்ளவும் செய்கிறார்கள். "என் எதிரே அண்ணாத்துரையே நிற்க முடியவில்லை" என்கிறார்கள். இவ்வளவும், யார் இவர்கள் என்று கேட்டால், அண்ணாத்துரையின் பேச்சையும் எழுத்தையும் காப்பியடித்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டவர்கள்! இவர்களில் முதலிடம் வகிப்பவர் தோழர் சிவஞானம்.

* * *

காமராசர் தன்னை வந்தோ— அல்லது அழைத்தோ—சந்திக்கவில்லை; ஓடிப்போய் அண்ணாத்துரையை சந்தித்தார் என்பதுதான் சிவஞானத்தின் முழு முதற் கவலை! என்ன செய்வது—காமராசருக்கு நிதான புத்தியிருக்கிறதே! அரசியல் புரிந்து, சூழ்நிலை தெரிந்து 'காமராசர் நடந்து கொள்ளக் கூடியவர் என்று நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். காமராசர் அண்ணாத்துரையைச் சந்தித்தற்கு—பெரியாரை ஆச்சாரியார் சந்தித்ததுபோல நட்புதான் காரணம். அண்ணாத்துரையிடம் காமராசர் 'காணா மலே காதல்' கொண்டிருந்தார் என்பது பொருள்—இதைத்தவிர இந்த சதிப்புக்கு அரசியல் முக்கியத்துவம் எதுவுமில்லை. இதையெல்லாம் பெரிய வாய்ப்பாகக் கருதி 'அரசியல் முக்கியத்துவம் கொடுத்துப்பார்க்க, அண்ணாத்துரை, சிவஞானமல்லவே! அறிவாளியாயிற்றே!

* * *

'பரிதாப வருடம் இது என்பதற்கு ஒரு உதாரணம் மேற் கண்டது. இரண்டாவது; தமிழ் நாட்டில் நடக்கும் ஒரு தினப் பத்திரிகை. இதை ஒருபத்திரிகை என்று வர்ணிப்பதைக் காட்டிலும் "காகித ஒந்தி" என்று அழைப்பது பொருந்தும். அடேயப்பா! கணச் சித்தம் கணப் பித்தம்! பத்திரிகைத் தொழிலையே இப்போது அதலபாதா

[2-ம் பக்கம் பார்க்க]

எண்ணம்

கண்ணதாசன்

அண்ணன் பொன்னம்பலனார் அவர்கள் மேடைகளில் பெருமையோடும் பூரிப்போடும் சொல்வார்கள்: "எங்கே பார்த்தாலும் நாம்; போகிற இடமெல்லாம் நமது கொடிகள்; வீடுதோறும் கழகக் காளைகள்; பார்க்குமிடமெல்லாம் நாமே! நாமே!" என்று. அவர்கள் பேசுவதைக் கேட்கும்போது நமக்கு ஒரு தெம்பு ஏற்படும்; பூரிப்பில் உடல் சற்று பெருத்துவிடும்; உள்ளம் உவகையால் துள்ளும்; உணர்ச்சி வசப்பட்டு மெய் மறந்து விடுவோம். "அவனியிலே நமக்கெதிரா யாருமில்லை" என்னும் எண்ணம் நம்மை உந்தித் தள்ளும்; ஏறு, ஏறு முன்னேறு; உன் லட்சியப் பாதை போய்ச் சேரும் இடம் கண்ணுக்குத் தெரிகிறது', என்று இதயம் கூறும்.

* * *

வளர்கிறவர்கள் — வளர்ந்து விட்டவர்கள்—எதனால் வளர்கிறோம்; நம்முடைய வளர்ச்சிக்கு காரணம் எது என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் வளர்ச்சி தடைப்பட்டு விடும். உண்மையைச் சொன்னால் நமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம்—முதல் காரணம் நம்முடைய கண்ணியமும், செயல்படும் திறமையும் தான். மற்ற இயக்கங்களுக்கு இல்லாத இந்தப் பெருமையை நமக்கு ஏற்படுத்தித் தந்தவர் நமது பெருமைக்குரிய பொதுச் செயலாளர், அறிஞர் அண்ணா அவர்கள்தான். நம்முடைய கொள்கை மிக உயர்ந்தது தான்; ஆனாலும் நம்முடைய பெருமைக்கு அது இரண்டாவது காரணம் தான். முதற்காரணம் நான் மேலே குறிப்பிட்டபடி, கண்ணியமும் செயல்படும் திறமையும் தான். கம்யூனிஸ்ட்கள் உலகெங்கும் இருக்கிறார்கள் — பலநாடுகளில் மிகுந்த செல்வாக்கோடும்; சில நாடுகளில் ஆட்சிபீடத்திலும்! ஆனால் தென்னாட்டை — திராவிடத்தைப் பொறுத்தவரையில் செல்வாக்கின்றிக் காணப்படுகிறார்கள். காரணம் கொள்கையிருந்தும், கண்ணியமும் செயல் முறையும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கி, உலகோர் கண்களில் உன்னதமாகக் காணும் அளவுக்கு வளர்த்துத் தந்த — தருகிற — நம் பொதுச் செயலாளரை இருபத்தி நாலு மணிநேரமும் நினைத்து நினைத்து வாழ்த்த வேண்டிய நாள், இந்த ஜூலை 15!

* * *

நாம் குடும்பமாக வளர்கிறோம், சகோதர பாசத்தோடு.

"தம்பீ! குழந்தை எப்படி இருக்கிறது?"

"உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்!"

"அனாவசியச் செலவு செய்யாதே."

"நாளைக்கு எந்த ஊர் செல்கிறாய்?"

—இப்படியெல்லாம், உடன் பிறந்த சகோதரர்கள் தான்—அதுவும் மிகவும் ஒற்றுமையாயிருந்தால்—பேசிக் கொள்வார்கள். ஆனால் இயக்கத் தோழர்கள் ஒருவருக்கொருவர் இப்படி உறவு கொண்டாடி, கலந்து பேசிக்கொள்ளும் போது, ஆகா! நெஞ்சம் நெக்குருகுகிறது!

* * *

நாம் "அண்ணா!" என்று அழைக்கும் போதும், அவர் "தம்பீ!" என்று அழைக்கும் போதும் — ஒரு பாசம், பற்று, உறவு-ஒருவர் காலில் புண்பட்டாலும் மற்றொருவர் கண்ணில் ரத்தம் வரும் அளவுக்கு ஏற்படுகிறது. இந்தக் குடும்ப ஒற்றுமை—களங்கமற்ற இந்த அன்புறவு—தேயாமல் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும்! அதற்கும் நம்மை வளர்த்துத் தந்த 'கண்ணியம்' தான் உதவும்.

* * *

எதிரிகள் கண்டு அஞ்சும் அளவுக்கு நம்மிடத்திலே ஒட்டுறவு இருக்கிறது. இது எந்தக் காரணத்தை முன்னிட்டும் அழிந்து விடாது. பலதரப்பட்ட உணர்ச்சி கொண்டவர்களை ஒன்றாக இறுகப் பிணைத்து வைத்திருக்கும் இந்தப் பாசமும் கொள்கையும்தான் "எங்கெங்கு பார்த்தாலும் நாம்" என்கிற நிலைமையைத் தேடித் தந்திருக்கிறது, இந்த ஜூலை 15ல. இதை நாம் எண்ணிப் பார்த்து, மேலும் நாம் போகும் பாதையைச் செப்பனிட்டுக் கொள்ளவேண்டும்.

* * *

"அண்ணாத்துரையைக் கதை கேட்டோம்; கருணாநிதியை எழுதச்சொன்னார்."

"அண்ணாத்துரையிடம் போனோம்; அரங்கண்ணலைப் பார்க்கச் சொன்னார்!"

"அண்ணாத்துரையிடம் "கதை வசனம்" தரும்படி மன்றாடினோம்; செழியனிடம் கேட்கச் சொன்னார்!"

"நீங்கள்தான் எழுத வேண்டும் என்றோம்; தம்பி நன்றாக எழுதுவான் என்றார்!"

—இப்படிப் பல பட முதலாளிகள் சொல்லக் கேட்டிருக்கிறேன் நான். தன்னலங் கருதாத் தியாகி, தனக்கென வாழப் பிறர்க்குரியாளர், பணம் வேண்டும், வாழ்க்கை வசதி வேண்டும் என்று கிஞ்சித்தும் எண்ணாதவர் என்ற பட்டங்களுக்கெல்லாம் இலட்சியமானவர், நம் பொதுச் செயலாளர் என்று பிறர் சொல்லக் கேட்கும் போது நம் உள்ளத்தில் மேலோங்கி வரும், அன்பு வெள்ளம்!

எந்தத் தில்லுமுல்லு செய்தாவது பணம் சேர்க்க வேண்டும்; வீடு வாங்க வேண்டும்; மனையாளுக்கு நிலம் வாங்க வேண்டும்; பின் பாட்டுப் பாடச் சில பக்க வாத்தியங்கள் வேண்டும்; கண்ணியம் காற்றிலே பறந்தாலும் சரி; பகைவர் கண்டு எள்ளி நகையாடும் அளவுக்குப் போனாலும் சரி; உல்லாசமும் சல்லாபமும் ஓயக்கூடாது என்று எண்ணும் உலகத்திலே, ஒரு சில கண்ணியவான்களும் இருக்கிறார்கள் என்பதற்கு, நம் தலைவரும், இயக்கத்திலுள்ள அறிவுடம்பட்ட தோழர்கள் அனைவரும் சான்று.

* * *

எங்கேயாவது மூலைமுடுக்கிலே சில சுயநலமிகள் இருக்கத்தான் செய்வார்கள்—உலகம் பலவிதம் என்ற நிலைக்கேற்ப! ஆனால் அவர்கள், எங்கேயோ இருக்க வேண்டியவர்கள் இங்கு வந்துவிட்டார்கள், பாதை தவறி என்று பொருளே தவிர, அவர்கள் இயக்கத்தின் கருவிலே ஒரு அணுக்கூட அல்ல!

* * *

பொறுமையிலும், தன்னலத் துறப்பிலும் காந்தியை ஒத்த நம் தலைவரும், நாமும், நம்மிடையே உள்ள பாசமும் கண்ணியமும், நமது கொள்கையும், வளர, உலகின் கண்களில் புரட்சிச் செம்மல்களாக நாம் ஆக வழி வகுத்துக் கொடுத்த நாள், ஜூலை 15!

* * *

கல்லக்குடியில் உயிர் துறந்த மாவீரன் நடராசனின்பெயரால். தூத்துக்குடியில் பலியான தோழனின் பெயரால் அடுத்த திட்டங்களுக்கு "துவக்க விழா" செய்ய வேண்டிய நாள் ஜூலை 15!

இந்த நாள் எதிர்காலத் திராவிடத்தின் தேசீயத் திருநாள்! *

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளத்துக்குக் கொண்டு வந்த பெருமை மேற்படி பத்திரிகையைச் சாரும். பொய்யும் புனைசுருட்டும் மேற்படி பத்திரிகையின் லட்சியங்கள், செய்திகளை திரித்துப் போடுவதற்கென்றே இவர்கள் பல நிருபர்களை வைத்திருக்கிறார்கள். இந்தப் பத்திரிகையைப் பற்றி நமது இயக்கப் பத்திரிகைகள் எல்லாமே எழுதிவிட்டன! ஆனாலும் இன்னும் செய்தித் திரிப்பும் பித்தலாட்டமும் நின்ற பாடில்லை!

* * *

மேற்படி பத்திரிகையின் முதலாளி, ஒரு கம்யூனிஸ்ட்! உலகத்திலேயே இவர் மாதிரி 'முதலாளித்துவ கம்யூனிஸ்ட்'கள் மிகவும் குறைவு! (இது தென்னாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு பெருமைதான்!) ஏழைகளின் அல்லல் பற்றி இந்தப் பத்திரிகையில் ஏராளமாக வருகிறது. (இந்தப் பத்திரிகாலய ஊழியர்கள் பலர் சாப்பாட்டுக்கே சம்பளம் பற்றாமல் கம்யூனிஸத்தை வளர்க்கிறார்களாம்) ஆக மேற்படி பத்திரிகை இன்னும் கொஞ்ச நாளில் கம்யூனிஸத்தையும் 'ஒரு வழியாக்கி' விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

* * *

இதுபோல் 'பரிதாப ஜன்மங்கள்' நமது கண்களில் நிறையத் தட்டுப் படுகிறார்கள். இதைப் பற்றி முழுக்க முழுக்க 'கலைநய'த் தோடு குறிப்பிட கொஞ்சம் அவகாசம் எடுத்துக் கொள்கிறேன்.

—கண்ணதாசன்

ஏழையின் இரத்தம்

சிந்தனைச்செல்வன்

"வேண்டாம்மா...நான் தாழ்ந்தவன்!"

"இல்லை, நீ உயர்ந்தவன்! என் இதய பீடத்தையே எட்டிப் பிடித்து என்னை உடமையாக்கிக் கொண்டவன்........!"

"அப்படிச் சொல்லாதீங்கம்மா, தகாத ஆசை என்றைக்கும் தகராறுதான்!.......அந்த ஆசையை அடியோடு மறந்திடுங்க."

"ஆசையை மறந்துவிடலாம். ஆனால் அன்பை மறந்துவிட முடியுமா? ஏகாம்பரம், உன்னை நான் முழு அன்போடு நேசிக்கும் போது உனக்கு ஏன் வீண் பயம்?

"பயம் அல்லம்மா....நியாயத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டாமா?"

"எது நியாயம்? உன்னை நான் விரும்பாமலிருப்பதா? அல்லது என் அன்பை நீ உதறித் தள்ளுவதா?.........ஏகாம்பரம், இதய பூர்வமான என் அன்பை நீ வெறுப்பது நியாயமா?"

"அம்மா! நீங்க படிச்சவங்க, படிப்புன்னா என்னான்னே எனக்குத் தெரியாது! நீங்க பணம் படைச்சவங்க, நான் பரம ஏழை! உயர்ந்த சாதியிலே பிறந்தவங்க நீங்க, உங்களுக்கு உழைச்சுப் போடும் தாழ்ந்த சாதியிலே பிறந்தவன் நான்!....இப்படி யிருக்கும் போது நீங்க என்மேலே ஆசைப் படறது நியாயமா? நீங்கதான் தவறா நடந்தாலும் அதை நான் ஏத்துக்கிறது நியாயமா?....... வேண்டாம்மா அந்த விபரீத ஆசை, விட்டிடுங்க.......!"

"ஏகாம்பரம், நான் பணக்காரியாகவும், படிச்சவளாகவும் இருக்கலாம். ஆனால் என் மனம் படித்த பணக்காரனையே விரும்ப வேண்டுமென்பது என்ன நியாயம்? என் உள்ளம் உன்னை விரும்புகிறது. நீயும் மனிதன்—நானும் உன் இனத்தைச் சேர்ந்தவள். அப்படி யிருக்கும்போது, சதிகாரர்கள் விரித்த சாதி வலையைக் காட்டி ஏன் சஞ்சலப்படுகிறாய்.......?"

"படிச்ச நீங்களே, இப்படிப் பாதை தவறி நடக்கலாமாம்மா?"

"படித்ததினால்தான் பண்புள்ள பாதையில் போக விரும்புகிறேன். பாதை தவறிய உன்னையும் நல்வழிப்படுத்துகிறேன். வாழ்க்கை என்பது என்ன? இருமனமும் ஒரு மனப்பட்டதுதானே? நம் இருவர் மனமும் ஒத்துப்போன பிறகு நமக்குள்ளே உயர்வு, தாழ்வு ஏது?"

"என்ன இருந்தாலும் புலியும் பூனையும் ஒன்றாக முடியுமாம்மா?"

"புலியும் பூனையும் ஒன்றாக முடியாதுதான்—ஆனால் பூனையும் பூனையும் ஒன்றாக முடியுமே?...... ஏகாம்பரம். உன் அந்தஸ்தும், ஆஸ்தியும் எனக்கு வேண்டாம், அவைகளைத் தாண்டிய நீ தான் எனக்கு வேண்டும். நீ ஏழை என்பதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் அந்த ஏழ்மையில் நீ அவஸ்தைப்படக் கூடாது என்ற அக்கரை உண்டு ஏகாம்பரம் இன்னுமா உனக்குப் புரியவில்லை ....நான், உன்னை மனமார விரும்புகிறேன், மறையாத அன்புடன் நேசிக்கிறேன்........!"

சுகுணாவின் வார்த்தைகளில் சுழன்ற புதுமை ஏகாம்பரத்திற்குப் பிடிக்கவில்லை — இல்லை, புரியவில்லை. அவளுடைய போக்கு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சாதியிலும் பணத்திலும் தன்னைவிட உயர்ந்த — அதுவும் படித்த அந்த நாகரீக நங்கை, தன்னை விரும்புவாள் என்று அவன் கனவில்கூட நினைக்கவில்லை. அதனால்தானோ என்னவோ அவள் தன் விருப்பத்தை வாய்விட்டுச் சொல்லியபோது அவன் மறுத்தான்.

ஆனால் அறிவுப் பாதையிலே அழகு நடை போடும் சுகுணாவா அவனைச் சும்மா விட்டுவிடுவாள்?

சுகுணா, மிராசுதார் மாணிக்கவாசகத்தின் செல்வத் திருமகள். பள்ளிப்படிப்பை முடித்துவிட்டுப் பருவப் பாதையிலே பீடுநடை பயிலும் பேரழகி.

அவள் வீட்டு வேலைக்காரன்தான் ஏகாம்பரம், வண்டி ஓட்டுவான். வகையாக மாடுகளைக் கவனித்துக் கொள்வான், வேலையொன்றும் இல்லாவிட்டால் எஜமான் வீட்டு வேலைகளையும் செய்வான். மாடாக உழைக்கும் அவனுக்கு மாதச்சம்பளம் என்று ஒன்றும்கிடையாது. மாதா, பிதாவற்ற அந்தப் பருவக் காளை, மிராசுதார் வீட்டிலே மீதமாகும் உணவைச் சாப்பிடுவான். மற்ற ஓய்வு நேரங்களில், மாளிகையை அடுத்த தன் மாளிகையில்—மண் குடிசையில் மகிழ்வுடன் நேரத்தைக்கழிப்பான்,

மிராசுதார் மாணிக்கவாசகம் சுயமதிப்பிலே மிகவும் அக்கரை கொண்டவர். அதனால்தானோ என்னவோ தன் ஏக புத்திரிக்கு தன்னைப் போலவே சாதியிலும் செல்வத்திலும் உயர்ந்த 'சீமானாக' ஒருவனை எதிர்பார்த்தார். 'சாதி குறைவு; செல்வம் குறைவு' என்று நாடிவந்த இரண்டொரு மாப்பிள்ளையையும் தட்டிக் கழித்தார். ஆனால் அவர் ஆசைக்குகந்தவன் அவ்வளவு எளிதிலா கிடைத்துவிடப் போகிறான்?

மிராசுதாரின் மனதுக்குப் பிடித்த மாப்பிள்ளை கிடைக்கவில்லை என்பதற்காக மகளின் வயதுமா நின்றுகொண்டிருக்கும்? ஆண்டுக் கற்கள் சிலவற்றை அவள் விரைந்து தாண்டினாள்.

பருவப் பூரிப்பிலே பரவசத்தோடு நிற்கும் பாவையின் பார்வை ஏகாம்பரத்தின் பக்கம் திரும்பியது—தனிமையிலே தவித்துக்கொண்டிருந்த அந்த தளிர்க் கொடி அவனைத் தாகத்தோடு நோக்கியது.

கட்டான உடம்பும் களையான முகமும் கொண்ட அந்தக் கட்டிளம் காளையைக் கண்ட கன்னியின் உள்ளத்திலே பாசமும் நேசமும் துள்ளித் தளும்பின. திரண்ட தோள்களும், பரந்த மார்பும் அவளுடைய உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சியைத் தூண்டிவிட்டன. தாழ்ந்தவன், தனம் இல்லாதவன், தற்குறி என்ற எண்ணம் முதலில் அவளுக்குத் தடையாகத் தோன்றினாலும், இளமை முறுக்கோடு கம்பீரமாக நிற்கும் அவன் ஆண்மையிலே அவளுக்கு ஒரு கவர்ச்சி விழுந்தது.

இளமைக் கனவுகளிடையே உல்லாசமாகச் சுழன்றுகொண்டிருந்த அவள் நெஞ்சம், முதலில் அவன் கம்பீரத்தைக் கண்டு பூரித்தது. அப்புறம் அவன் ஆண்மை அழகிலே மூழ்கி ஆழ்ந்து ரசித்து அனுபவிக்கத் துவங்கியது. பிறகு எப்படியும் அவனைத் தன் மணாளனாக்கிக் கொண்டு மகிழ்வுடன் வாழவேண்டுமென்ற தணியாத ஆசையும் துளிர்விட்டது,

ஆனால் தந்தை ஒப்பமாட்டாரே என்ற அச்சம் தடையாக முகாமிட்டது. அவன் தடந்தோள்களைத் தழுவவேண்டும் என்ற இச்சை தடையைத் தகர்க்க, தந்தை சம்மதித்தால் மாளிகையிலே மணமுவந்த வாழ்வு, மறுத்தால் மண் குடிசை இருக்கவே இருக்கிறது என்ற அளவிலே போய் நின்றது.

தன் உள்ளத்தைத் திறந்து காட்டிய சுகுணாவைத் தகாது என்று கூறித் தடுக்க முயன்றான் ஏகாம்பரம். ஆனால் தீர ஆலோசித்த அந்தத் தேன் மொழியாளா, அவனை அவ்வளவு எளிதில் விட்டுவிடுவாள்? உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகள் வளர்ந்த விதத்தை விளக்கிக் கூறினாள். ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகளுக்கு உண்மையான காரணங்களை எடுத்துக் காட்டினாள். சாதி மத பேதமென்ற சமுதாய மேடு, பள்ளங்களை அமைத்த, சுயநலக்காரர்களின் சூழ்ச்சியை வெட்ட வெளிச்சமாக்கினாள்.

செய்வதென்ன என்று தெரியாமல் கலங்கி நின்ற ஏகாம்பரத்தின் சிந்தையையும் தெளிவித்தாள்.

அவனும் இளைஞன்தானே! பருவ மாளிகையின் மாடியிலே பெருமையோடு நிற்கும் பக்குவ வயதுதானே! வாலிபக் கனவுகளிடையே வட்டமிடும் வெற்றி வீரன்தானே! அவள் விரித்த அன்பு வலையிலே அவன் விழுந்தான்—இல்லை, கனவுகளை மறந்து நினைவுகளிடையே அவளோடு உலவினான் உல்லாசமாக!

ஆம், ஈருடலும் ஒருயிருமாய் ஆயினர் சுகுணாவும், ஏகாம்பரமும். உள்ளம் ஒன்றுபட்ட அவர்கள் ஏற்றத்தாழ்வுகளை மறந்து, இணைந்த எண்ணத்தோடு இன்பமாக நாட்களை விரட்டினர். அதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு அதிகமாக இருந்தது.

4-ம் பக்கம்பார்க்க

ஒரு பத்திரிகை நிருபர் பெருமை!

இன்று உலகிலேயே பத்திரிகை நிருபர்களுக்குள்ளே தலைசிறந்து விளங்குபவர் விக்காம் ஸ்டீட் என்ற ஆங்கிலேயர்தான். இப்போது அவருக்கு 79 வயதாகிறது. பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் இலாக்காவில் முக்கியப் பதவி வகிக்கிறார். உலகெங்கும் கோடிக்கணக்கானவர், அவரது உலக வர்த்தமான விமர்சனங்களைத் தினந்தோறும் ரேடியோவில் கேட்டு வருகிறார்கள்.

1919-ஆம் ஆண்டு லார்டு நார்த்கிளிப் இவரைத் தமது 'டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியராக நியமித்துக்கொண்டார். விக்காம் ஸ்டீட் தமது மனச்சாட்சிப்படி சுதந்திரமாய் நடப்பவர். ஆகையால், அந்தப் பதவி வகிக்கத் தொடங்கிய மூன்றாவது வருஷம், முதலாளி நார்த்கிளிப்புக்கும் இவருக்கும் ஏதோ ஒரு அபிப்பிராய பேதம் ஏற்பட்ட போது இவர் விலகவேண்டியதாயிற்று.

என்னதான் மனவருத்தத்துடன் பிரிய நேர்ந்தாலும், இவர் பெருமையை நார்த்கிளிப் அறிந்திருந்ததால், லட்சம் பவுனுக்கு ஒரு 'செக்' எழுதி அதை இவருக்கு ஸன்மானமாக அனுப்பினார். விக்காம் ஸ்டீட் அந்தச் 'செக்'கைக் கொடுத்துப் பணம் வாங்கவில்லை, அப்படியே சட்டமும் கண்ணாடியும் போட்டு வீட்டிலே மாட்டிவிட்டார்! பணத்தை விட ஒரு பத்திரிகை நிருபனது கௌரவம் பெரிது என்று அவர் இதன் மூலம் நிலைநாட்டியது உலகப் பிரசித்தமாகி விட்டது!

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பண்ணையைப் பார்க்கப் போய் விடுவார் மிராசுதார். பகலிலே மட்டுமின்றி, இரவு வெகுநேரம் கழித்துத்தான் திரும்புவார். வீட்டிலே வேலையிருக்கிறது என்று தங்கிவிடுவான் ஏகாம்பரம். இல்லையேல், 'எங்காவது போகவேண்டும். அதற்கு வண்டி வேண்டும்' என்று கூறிச் சுகுணா அவனை நிறுத்திவிடுவாள். அவள் அன்னையோ தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவள். வேலைக்காரர்களிடம் வேலை வாங்கவே அவளுக்கு நேரம் இல்லாதபோது இவர்களின் காதல் லீலைகளைக் கவனிக்க அவளுக்கு ஏது நேரம்?

தங்குதடையற்ற அவர்கள் விளையாட்டில் களிப்பிற்குக் கேட்கவா வேண்டும்?

எனினும், பயந்து பயந்து ஏகாம்பரத்தோடு பழகும் நிலை சுகுணாவிற்கு அடியோடு பிடிக்கவில்லை. தனிமையின் இனிமையிலே கனிவு பொங்க அவனோடு காதல் வாழ்க்கை நடத்த விரும்பினாள். இதயம் கவர்ந்தவனோடு ஏகாந்தமான வாழ்க்கையிலே எண்ணத்தைச் செலுத்தி அதற்கான திட்டம் ஒன்றையும் தயாரித்தாள்.

தயாரித்த அளவோடு நின்றுவிடாமல் அதனைச் செயலிலும் நடத்திக் காட்ட விரும்பினாள். ஆனால் அவள் திட்டத்தை அறிந்த ஏகாம்பரம் அசந்துபோனான்.

"இது அவ்வளவு நன்றாயில்லே சின்னம்மா.......!"

"அதற்காக இப்படியே...... பயந்து பயந்து சாகச் சொல்கிறாயா?;'

"அப்படிச் சொல்லலே......!"

"பின் எப்படிச் சொல்கிறாய்? ஏகாம்பரம், நம்ம இரண்டுபேரும் கல்யாணம் செய்துக்க அப்பா நிச்சயம் சம்மதிக்கமாட்டார்—இந்த விஷயத்தை அவரிடம் சொல்லக் கூட முடியாது.......!"

".... ... ."

"நீயும் நானும் கல்யாணம் செய்து கொண்டு களிப்புடன் வாழவேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி.... இதுதான்!"

"என்ன இருந்தாலும், யாருக்கும் தெரியாம.......!"

"மீண்டும், மீண்டும் அதைத் தானே சொல்கிறாய்?......ஏகாம்பரம், என்னோடு நீ இன்பமாக வாழ வேண்டுமென்றால், அதற்கு ஒரே வழி...இன்று இரவு மெயிலில் புறப்பட்டு விடவேண்டியது தான்...!"

"இன்றைக்கேவா...?"

"ஆமாம்! இன்று இரவு அப்பா இருக்கமாட்டார் — கோயிலில் நடக்கும் டான்ஸிற்குப் போய்விடுவார்!.......நான் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து விட்டேன், இரவு புறப்பட்டுவிட்டால், காலையிலே சென்னை சேர்ந்துவிடலாம். பிறகு என்றுமே பிரியாத போக வாழ்வு தான்...... !"

"... ... ."

"என்ன ஏகாம்பரம். பேசாமல் நிற்கிறாயே?...எனக்காகவா இந்த ஏற்பாட்டைச் செய்கிறேன். உனக்காக—உன்னோடு சந்தோஷமாக வாழவேண்டும் என்பதற்காகத் தானே.......!"

"சரி.......!"

சோர்ந்து போய்ச் சொல்கிறாயே? ....எங்கே சந்தோஷமாக....!

"சரி சுகுணா!"

"அப்பாடி!.......உம்...சரியாக எட்டு மணிக்கு?"

"உன் அறைக்கு வந்திடுறேன்...!"

"ஏமாற்றிவிட மாட்டாயே?

"நானா?... நிச்சயமாக வந்துவிடுகிறேன்.... ...!"

உவகை மிகுதியால் உணர்ச்சி வயப்பட்ட அந்த இரு உள்ளங்களும் மகிழ்ச்சியோடு பிரிந்து சென்றன.

இன்ப வாழ்க்கையை மறுநாள் துவக்கப் போகிற ஆனந்தத்திலே, அவர்களின் அருகே மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த ஒரு உருவத்தை அவர்கள் கவனிக்கவில்லை—களிப்பு அவர்களைக் கவனிக்க விடவில்லை.

ஆதவன் மேற்றிசையிலே மறையக் காரிருள் எங்கும் கப்பிக் கொண்டது. நிலவின் வாடையே இல்லாத அந்த இரவு இருளின் இன்ப நாதத்திலே மயங்கிக் கிடந்தது.

சிந்தனை அலைகளில் புதைந்து போய்க் கிடந்த சுகுணா எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம் வந்தது. மணியும் எட்டடித்தது.

ஆவலோடு கண்ணாடி முன் சென்று தன் அழகை ஒருமுறை சரிபார்த்து விட்டு, அவன் வருகிறானா என்று வழியை நோக்கினாள். ஆனால் அவள் கண்களுக் கெட்டிய தூரம்வரை அவன் உருவம் தென்படவில்லை. சலிப்போடு திரும்பிய அவள், தான் தயார் செய்து வைத்திருந்த சாமான்களை ஒருமுறை சரிபார்த்துவிட்டு, மீண்டும் அவன் வருகிறானா என்று பார்த்தாள். அவன் வரவில்லை.

ஆழ்ந்த யோசனையோடு உள்ளும் வெளியுமாக நடந்து கொண்டிருந்த அவள், வழிமேல் விழி வைத்து அவனையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். நேரம் ஓடியது. ஆனால் அவன் வரவில்லை. கால் மணி ஓடியது. எனினும் ஏகாம்பரத்தைக் காணவில்லை. அரை மணி ஓடியது—ஆயினும் அவன் வருவதற்கான அறிகுறிகள் எதுவுமே தோன்றவில்லை. அரை முக்காலாகி, முக்கால் முழுதாகி மணியும் ஒன்பதடித்தது.

ஆனால் அவன் வரவேயில்லை.

அவன் தன்னை ஏமாற்றி விட்டானோ என்று நினைத்தாள். இருக்காது, அவ்வளவு அன்பு கொண்ட அவன் ஏமாற்ற மாட்டான் என்று முடிவு கட்டினாள். அப்பா ஒருவேளை கோயிலுக்கு அழைத்துச் சென்றிருப்பாரோ என்று எண்ணினாள். ஆனால் அவனை அப்பா கோயிலுக்கு அழைத்துச்செல்லும் பழக்கமில்லையாகையால், இருக்காது என்று நம்பினாள்.

அவள் மூளையே குழம்பியது.

எதற்கும் குடிசைக்குச் சென்று பார்த்தால் தெரிந்து விடுகிறது என்று நினைத்த அவள் கால்கள் அனுமதியின்றியே குடிசையை நோக்கி நடந்தன.

குடிசை மூடிக்கிடந்தது.

திரும்பிவிட எண்ணினாள்— உள்ளே சென்று பார்க்கலாமே என்ற ஒரு நினைப்பு, அவளை உள்ளே உந்திவிட்டது. இருண்ட அந்த இரவிலே குடிசையினுள் ஒன்றுமே தெரியவில்லை தட்டுத் தடுமாறி, நெருப்புப் பெட்டியைத் தேடி எடுத்து விளக்கைப் பொறுத்தினாள்.

அவ்வளவுதான், 'ஆ'வென்று அலறிவிட்டாள்.

"ஆம்! அங்கே ஏகாம்பரம் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

சுகுணாவோடு சொகுசாக வாழ்க்கை நடத்தி, இன்ப வெள்ளத்திலே மிதக்கவேண்டிய ஏகாம்பரத்தை இரத்த வெள்ளத்திலே மிதக்க விட்டுவிட்டார் மிராசுதார் மாணிக்கவாசகம்!

உண்மையறியாத சுகுணா 'ஏழையின் இரத்தத்தை'க் கண்டு அலறியடித்தபடி அழுதுகொண்டிருந்தாள்! *

மிக அபாயமானவர்கள்!

சென்ற மகாயுத்தத்தின்போது, ஜெர்மன் சேனாதிபதி விடுத்த ஒரு சுற்றறிக்கையின் நகல், பிரிட்டிஷ் சர்க்கார் மாளிகையான வொயிட் ஹாலில் சுற்றி வழங்கி வருகிறது. அதன் வாசகமாவது:

'நான் என் ராணுவ உத்தியோகஸ்தர்களைப் பின்வருமாறு நான்கு வகையாகப் பிரிக்கிறேன்: 1. கெட்டிக்காரன் 2. உழைப்பாளி 3. சோம்பேறி 4. முட்டாள். ஒவ்வொரு உத்தியோகஸ்தனுக்கும் இதிலே இரண்டு குணங்கள் கண்டிப்பாய் இருக்கும்.

'முட்டாள்தனமும் உழைப்பும் உள்ளவர்களை எனது காரியாலயத்தில் அமர்த்திக்கொள்ளுகிறேன்.'

'முட்டாள்தனமும் சோம்பேறித்தனமும் உள்ளவர்களைச் சில சமயம் உபயோகித்துக் கொள்வேன்.'

'கெட்டிக்காரத்தனமும் சோம்பேறித்தனமும் உள்ளவர்களை மிக உயர்ந்த தலைமைப் பதவிகளில் நியமிப்பேன். அவர்களுக்கு நெஞ்சுரமும், கடும் பிரச்னைகளுக்கு முடிவுகாணும் மனத்தெளிவுமுண்டு.

'மூடத்தனமும், உழைப்பும் உள்ளவர்கள்தான் மிக்க அபாயமானவர்கள். அவர்களை விரட்டிவிடுவேன்.'

குழந்தை உலகம்!

அடுத்த வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் ஓயாத சண்டை. காரணம், அவர்களுக்குக் குழந்தை இல்லை!

★

யானையைப் பார்க்க மனிதன் விரும்புகிறான்; ஆனால் கட்டி அணைத்து முத்தமிட நினைப்பதில்லை. கிளியிடம் மனிதனுக்கு அந்த அன்பு பிறக்கிறது. குழந்தைகளும் அப்படித்தான்.

★

உலகெல்லாம்—உயிர்களெல்லாம் ஒரு நாள் அழிந்துபோய், நான், ஒரு பெண், ஒரு குழந்தை ஆகிய மூவரே மிச்சமிருக்க, "உனக்குக் குழந்தை வேண்டுமா, பெண் வேண்டுமா?" என்று இயற்கை கேட்டால், நான் குழந்தையையே ஏற்றுக்கொள்வேன்.

★

உங்களுக்குக் கோபம் வருகிறதா? ஒரு குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக்கொள்ளுங்கள்; கோபம் போய்விடும்.

★

மனைவியைக் கணவன் அடித்தான்; குழந்தை அழுதது. உடனே மனைவியைக் கட்டி ஒரு முத்தமிட்டான்; குழந்தை சிரித்தது. மனைவியும் சிரித்து விட்டாள்.

ஆடும் தீவு!

[தென்னாட்டிலே எங்கு பார்த்தாலும் நடனம்; நாட்டியம்! குழந்தைகளெல்லாம் பிஞ்சிலே பழுத்து, கண்ணனைக் காதலுக்குக் கூப்பிடுகின்றன. இது நாட்டிய யுகம். பல நூறு ஆண்டுகளாக ஒரு தீவே நாட்டியமாடிக் கொண்டிருக்கிறது—நமக்கு சமீபத்தில்!]

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் வரையில், இந்தியர்கள் ஓங்கி யிருந்தனர் பாலித்தீவில். சுமார் 1900 வருடங்களுக்கு முன்பு, இந்தியர் போய்க் குடியேறியது அந்தத் தீவு. இந்திய நாகரிகத்தின்-இந்தியக் கலாச்சாரத்தின்-ஒரு கிளை, எப்படி வேர் விட்டு, துளிர்த்து, தனித் தன்மையுடன் ஓங்கி வளர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு உதாரணம் அந்தத் தீவிலே காணக்கிடக்கிறது என்று சொல்லலாம்.

எனினும், பாலி மக்களின் வாழ்க்கை முறையும் கலாச்சாரமும் இதுவரையில் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. அவர்களுடைய ஒவ்வொரு கிராமமும், ஒரு சிறிய குடியரசு போன்றது. கூட்டுறவு முறையில் அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். மிக உயர்ந்த கலாச்சாரங்கள் நிறைந்தது அவர்களுடைய வாழ்க்கை.

பாலி நாட்டில், சகலரும் கலைஞர்கள். கூலிகளும் ராஜகுமாரரும், புரோகிதரும் குடியானவரும், ஆண் பெண் அடங்கலும் நாட்டியமாடுவார்கள்; இசைக் கருவிகளை மீட்டுவார்கள்; சித்திரம் வரைவார்கள்; அல்லது மரத்திலே பதுமைகள் செதுக்குவார்கள். அங்கே ஒவ்வொரு தலைமுறையும் புதிது புதிதாக, கலைச் செல்வத்தைச் சிருஷ்டித்து வருகிறது.

பின் சந்ததிக்கென்று சிற்பமோ, சித்திரமோ எதுவும் அந்நாட்டில் நிலைப்படுத்தப்படுவதில்லை. பாலியில் அகப்படும் பாறைக் கற்கள் சில வருஷங்களுக்குள்ளே பொடிப் பொடியாய்ச் சிதைந்து உதிர்ந்துவிடும்; மரப் பதுமைகளையோ கறையான் அரித்துவிடுகிறது; காகிதமும் துணியுமோ பெருங் குளிரின் ஈரத்திலே கசங்கிப்போகின்றன. ஆதலால், சாசுவதக் கலைப் பொருள் எதுவும் அங்கே கிடையாது. அவ்வப்போது அந்தச் சந்ததியார், பழமையுடன் புதுமை கலந்து, தத்தம் மனோதர்மத்துக்கிசைய, சிலைகளையும் சிற்பங்களையும் சித்திரங்களையும் பிறவற்றையும் படைத்துக் கொள்கிறார்கள். ஆகையால், கலைத்திறமை அந்நாட்டிலே ஜீவநதி போல எந்நாளும் பெருகிக்கொண்டே யிருக்கிறது.

பாலியிலே ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு சிறந்த வாத்தியக் கோஷ்டி உண்டு; நடனக் கோஷ்டியும் உண்டு. வாழ்வுக்கும் சாவுக்கும் உற்சவங்களுக்கும் அவர்களை அழையாமல் தீராது.



நிலவொளியில் நடிக்கும் 'அட்ஜா' என்ற நடனத்தில் மன்னனும் கோமாளி மந்திரியும்

பாலித்தீவின் நடனங்கள் உலகப் பிரசித்தமாகும். அந்நாட்டின் கலைவளத்தை முக்கியமாக அதன் நடன நுட்பங்களை — காண்பதற்கென்றே மேனாட்டிலிருந்து ஏராளமான அந்நியர்கள் அங்கே பிரயாணம் செய்துவிட்டு வருகிறார்கள். அந்நாட்டின் நடனங்களிலே மிக முக்கியமானது லெகாங் என்பதுதான். இது ஸ்திரீகளுக்கென்றே ஏற்பட்டது.

லெகாங் நாட்டியத்திலே மூன்று பெண்கள் வருவார்கள். கிராமத்து ஆலமரத்தடிதான் நடன அரங்கம், சோர்ந்து களைத்த மூன்று நடிகைகள் அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். தங்கக் கிரீடமும் புஷ்பங்களும் ஆடம்பரமான ஆடைகளும் அவர்கள் அணிந்திருப்பார்கள் முகத்திலே பவுடர் ஏராளமாய்ப் பூசியிருப்பார்கள். கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் வந்து கூடும், போதிய கூட்டம் வந்து சேர்ந்த உடனே, கீத வாத்தியங்கள் மெல்ல மெல்ல முழங்கத் தொடங்கும். நடனப் பெண்கள் மூவரிலும் தலைவி, மந்த முகத்தோடேயே எழுந்து அரங்கத்தின் நடுவே பொம்மைபோல் நிற்பாள். திடீரென்று வாத்தியங்கள் அலறும். ஏதோ மின்சாரக் கதிர் வந்து தாங்கியதைப் போல, நடிகை துள்ளி நிமிர்வாள்; ஓர் அற்புத பாவத்தை அபிநயம் பிடித்து உற்சாக நிறைவுடன் ஆடிக் குதிப்பாள், உடல் முழுதும் சொகுசாய் வளையும். சிட்டுக் குருவிபோல், தத்தித் தத்திச் சுழலுவாள். ஒரு புஜம் தூக்கி நிற்கும். விரல் நரம்புகள் முறுக்கேறி விதிர்த்துக் கொண்டிருக்கும். கண்கள் விண் வெளியை ஏறிட்டுப் பார்க்கும். ஒவ்வொரு முறை வாத்தியங்கள் மாறிக் கொட்டும் பொழுதும், நடிகையின் பாவங்களும் கோலங்களும் மாறும். வரவரத் துரிதம், துரிதம், அதி துரிதமாய் நடனம் விறுவிறுப் படையும். காலைப் பொதீர் என எடுத்துக் குத்திடுவாள். வில் நாணைப்போல் அந்தக் கால் அதிரத் தொடங்கும், அங்கே ஆரம்பித்த அந்த நடுக்கம் மெல்ல மெல்ல, இடை, மார்பு, புஜம், கழுத்து, கடைசியிலே தலைவரையில் பரவும்; முடியிலிருந்த புஷ்பங்கள் நாலா புறமும் சிதறிக் குதறிவிழும், சட்டென்று அந்த நடுக்கம் நிற்கும். பெண் ஒரு பந்தைப்போல் வலமும் இடமும் திரும்பிச் சுழன்று, நடனத்தை நிறுத்தாமலே கீழே கிடக்கும் இருவிசிறிகளை எடுப்பாள். அவற்றைத் தனது இரு தோழிகளிடம் கொடுப்பாள். பிறகு, மூவரும் ஆடுவார்கள். அதன்பின், மூவருமாய்ச் சேர்ந்து, ஒரு நீண்ட கதையை அபிநயித்து நடிப்பார்கள்.

இந்த லெகாங் நடனத்தைச் சிறிது மாற்றிய டிஜோகிட் என்றொரு நாட்டிய முண்டு. இது கொஞ்சம் சிற்றின்ப ரீதியானது என்று பாலிமக்கள் கருதுகிறார்கள். ஆயினும், இதுவும் மிகப் பழக்கத்திலிருக்கிறது, இதில் ஒரு பெண் லெகாங் நாட்டியம் போல நடித்துக்கொண்டே யிருக்கையில், இடை நடுவில் சபையில் உள்ள எவனையாவது பார்த்து, காம சமிக்ஞைகள் செய்வாள். உடனே அவனும் எழுந்து, அவளோடு சேர்ந்து குதித்து ஆடத் தொடங்குவாள். இந்த வெறியிலே சில சமயம் பல புருஷர்கள் சேர்ந்து, கூத்தாடுவது முண்டு. அபூர்வமாகச் சில அடிதடிகளும் இதிலே நடந்திருக்கின்றன,

பாரிஸ் என்ற மற்றொரு நடனம் யுத்த நர்த்தனமாகும். பாலி நாட்டு ராஜ குமாரன் ஒவ்வொருவனும் இதை ஆடத்தெரிந்திருக்க வேண்டும். குதிகால் மீது குந்தி உட்கார்ந்து, முழங்கால்களை உடலுக்கு நேராய் இருபுறமும் அகல விரிப்பது இதில் அவசியம். நல்ல தேகாப்பியாசமும், உணர்ச்சிகளைக் காட்டும் முகபாவமும், ஓங்கிய குரலும் உள்ளவனே இந்த நடனத்தைப் பயில முடியும்.

கேபியார் என்ற வேறொரு புதிய நடனம் இப்போது மிகப் பிரபலமா யிருக்கிறது. தரையை விட்டு எழுந்திராமலே நடிகன் பற்பல பாவங்களை இதிலே காட்டுகிறான். இதை மேரியோ என்ற மேதை சில வருஷங்களுக்கு முன் சிருஷ்டித்து அபிநயிக்கத் தொடங்கினான். அவனுக்குப் பல சிஷ்யர்களும் இன்று ஏற்பட்டிருக்கிறார்கள்.

மின்சார பாட்டரியைப்போல, தங்கள் உடம்பு ஒரு சக்திக் களஞ்சியமே என்று பாலி நாட்டான் ஒவ்வொருவனும் நம்புகிறான். பல வித்தைகளைக் கற்றால், அந்தச் சக்தியை தங்கள் இஷ்டப்படி உபயோகிக்கலாம் என்பது பாலி மக்களின் நம்பிக்கை. இந்தச் சக்தியை வைப்பதிலேயே தங்களுடைய சுகதுக்கங்களெல்லாம் ஏற்படுகின்றன என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஈட்டி நடனம் ஒன்றில், நடிகன் ஆவேசமுற்றித் தன் உடம்பிலே ஈட்டியால் குத்திக்கொள்வான். ஆயினும், அந்தப் பரவச நிலையிலே அவன் மகா ஆக்ரோஷமாய்த் தேகத்திலே குத்திக் கொண்டாலும், ஒரு காயங்கூடப் படுவதில்லை. அது நடனத்தின் லாகவமே என்று நமக்குத் தோன்றினாலும், பாலி மக்கள் சொல்லும் காரணம் வேறாகும்.

இந்த மாதிரி இன்னும் பல நடனங்களும் பாலி மக்கள் ஆடுகிறார்கள். இவற்றைப் பார்ப்பதிலும் இவற்றிலே கலந்து கொள்வதிலும் அந்த ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் பரம ஆர்வம், ஒவ்வொரு நாள் இரவும் அண்டை அயலில் ஏதாவதொரு நாடகமோ— நாட்டியமோ சங்கீதமோ நடவாமல் இருப்பதேயில்லை. கிழவர் முதல் சிறுவர் வரையில் அநேகமாய் ஊரடங்கலும் திரண்டு அதைப் பார்க்கச் சென்று விடுகிறார்கள். அவர்களின் இந்த நாடகம், நடனம், இதர கலைகள் அனைத்தும் அவர்களது கூட்டுறவு வாழ்க்கை முறையை வளர்க்கும் ரீதியிலேயே பயிலப்பட்டும் நடத்தப்பட்டும் வருகின்றன,

மேல் நாட்டு நாகரிகம் இன்னும் அவர்களிடம் பரவவில்லை. சினிமாக் கொட்டகைகளையோ பிற நாட்டு நாடகமுறைகளையோ அவர்கள் ஆதரிக்கவில்லை. இயற்கைச் செல்வத்தில் அவர்கள் கொழித்துக்கொண்டு அழகும் இன்பமும் நிறைந்த கலை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் காசைப் பற்றிக் கவலையில்லை; ஏனெனில், அவர்களது வாழ்க்கை கூட்டுறவு முறையில் நடப்பதால், காசின் தேவையே அவர்களுக்கு ஏற்படுவதில்லை.

இப்பேர்ப்பட்ட பாலித் தீவில் இப்போது மெல்ல மெல்ல மேல் நாட்டு நாகரிகம் தலையை நுழைக்க ஆரம்பித்திருக்கிறது. மோட்டார்க் கார்களும், அந்நியத் துணிகளும், மண்ணெண்ணெய்களும், பெட்ரோல் முதலியனவும் புகுந்து, கொள்ளை கொள்ளையாய்ப் பணத்தை வெளியேற்றி வரத் தொடங்கி யிருக்கின்றன. வாலிபர்கள், தங்கள் மூதாதையரை விட்டுப் பிரிந்து, மேல் நாட்டு நாகரிக ஆசையில் மூழ்க ஆரம்பித்திருக்கிறார்கள்.



'லெகாங்' என்ற நாட்டிய அபிநயங்களைக் கற்கும் ஒரு சிறுமி

உங்களுக்குச் சுவையாகக் கேள்வி கேட்கத் தெரியுமா? தெரிந்தால்......

''கேள்விப் பெட்டி''க்கு

எழுதுங்கள்.

சுவையான

பதில் கிடைக்கும்

அடுத்துவரும்

'தென்ற'லில்

ஆரம்பமாகிறது.

மாஸ்கோவா?

தென்னகத்தே—திலக மெனத் திகழும் திராவிடத்தே—திரை கடல் சூழ்ந்த தமிழகத்தில் வாழும் மூன்று கோடி மக்களின் முன்புள்ள ஒரே கேள்வி "நீ எந்தப் பாதையில்?" என்பதுதான்!

தமிழகத்தின் அரசியல் வானில் இதுவரை ஏற்படாத குமுறல் — இத்தனை காலமாக எழாத சிக்கல் சிறகடித்துப் பறக்கிறது!

முற்போக்குக் கட்சிகளிடையே மோதுதல்—முன்னணி இயக்கங்களுக்கிடையே குமுறல்! எதிர்க் கட்சிகள் எனத் திகழும் இயக்கங்களுக்கிடையே கொந்தளிப்பு! அணு அணுவாக—நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஏன் இந்த நிலை? யார் வைத்த தீ நாடெங்கும் சூழ்ந்து கொண்டது. ஒருவரை ஒருவர் சந்திக்கிற இடங்களிலெல்லாம் சஞ்சலம் தோய்ந்த முகத்துடன் பேசிக் கொள்கிறார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் திராவிட இயக்கத்துக்கும் இடையே ஏற்பட்ட பிளவு பெரிதாகிக் கொண்டுள்ளதை நாடறியும், நாட்டு மக்கள் அறிவார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியவர்கள் யார்? இவ்வளவு காலமாக மூடி மறைக்கப் பட்டுவந்த பூசல் பேருருக் கொண்டு பிரமாதப் படுவானேன்?

ஏன் இந்தக் கொந்தளிப்பு? எதற்காக ஏற்பட வேண்டும் இந்த தவிப்பு? அரசியல் நாகரீகம் அலங்கோலப்படுவானேன்? அதைக்கண்டு ஆளும் வர்க்கம் கைக்கொட்டி நகைப்பானேன்?

ஏறத்தாழ இரண்டொரு ஆண்டு காலமாக கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறை போக்கே இந்த அவக்கேட்டுக்குக் காரணம் என்றால் மிகையாகாது.

கம்யூனிஸ்ட் கட்சி ஒரு முற்போக்கு இயக்கம் தான்—இதை திராவிட இயக்கம் மறுக்கவில்லை—எந்த நாளும் மறைத்ததும் கிடையாது! இன்னும் சற்றுத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமானால் பொதுவுடமையை ஏற்கும் மனவளம் திராவிட இயக்கத்துக்கு உண்டு, தமிழகத்தின் மண்வளமும் அதற்குப் பக்குவப்பட்டதுதான்; ஆனால் திராவிட இயக்கத்தை முற்போக்கு இயக்கமாக கருதும் நோக்கம் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டா? அந்தப் பெருந்தன்மை கம்யூனிஸ்ட் கட்சிக்கு கிடையவே கிடையாது.

கம்யூனிசம் தமிழகத்துக்குப் புதியதுமல்ல. பண்டைத் தமிழகம் கம்யூனிசத்தின் ஒரு தெளிவான உருவமாகவே விளங்கி வந்தது பல வகைகளிலே. கம்யூனிசத்திலுள்ள சிறப்புகள் பலவற்றை அந்த நாளில் தமிழர்கள் கடைப்பிடித்து வந்து இருக்கிறார்கள் என்பது சங்க இலக்கியம் சாற்றும் செய்தி. பொதுவுடமைப் பிதா காரல் மார்க்ஸ் தோன்றுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே தமிழகத்தின் வீதிகளில், செந்நாப்புலவர் திருவள்ளுவர் கம்யூனிச விதையைத் தூவிச் சென்றுள்ளார். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்று அறுதியிட்டு உறுதியாக உரைத்தவன் —இந்நாட்டில் முதல் முழக்கம் செய்தவன்—தமிழகத்து மூதறிஞன் திருவள்ளுவன் தான்.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான 'திராவிட நாடு' இலட்சியத்தை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாரில்லை. அவர்கள் அதற்கு காட்டும் காரணங்கள் பல—விநோதமானது—விசித்திரமானது. அவை அனைத்தும் வேண்டாதவன் கூறும் விபரீத வாதங்கள்—கவைக்குதவாத கருத்துரைகள்—அறிவு ஏற்காத, அற்பத்தனமான விளக்கங்கள்—தெளிவற்ற முடிவுகள் நிலையற்ற அறிக்கைகள்!

கம்யூனிஸ்ட்டுகள் யார்? என்பது தி. மு. கழகத்திற்கு தெரியும். தெள்ளத் தெரிந்துவிட்ட காரணத்தால்தான் கடந்த தேர்தலின் போது திராவிடநாடு பிரிவினையை முன்னிறுத்தியது. அந்த ஒரு பிரச்னைதான் கம்யூ

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கமெல்லாம் திராவிட நாடு என்னும் எல்லைக்குள்ளே கம்யூனிசம் காண வேண்டுமென்பதே; இது அண்ணாவின் அசைக்க முடியாத நம்பிக்கை.

பொதுவுடமைப் பிதா காரல் மார்க்சின் சித்தாந்தங்களை மாற்றியும் திருத்தியும் ரஷ்யாவுக்கு ஏற்றபடி ஸ்டாலினும், சீனவுக்குகந்த முறையில் மா. சே. துங்கும் அமைத்துக் கொண்டிருப்பதைப்போலவே நாமும் திராவிட நாட்டிற்கேற்ற முறையில் கம்யூனிசத்தை ஏன் பயன் படுத்தக் கூடாது என்பதுதான் அண்ணாவின் கேள்வி. இதை கம்யூனிஸ்ட்டுகள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

அண்ணாவின் பாதையே அருமையான பாதை!

இது மிகப் பழமையான செய்தி-காலங்கடந்த செய்தி; இதை ஏற்கவும் கம்யூனிஸ்ட்டுகள் ஆர்வங் கொள்ள மாட்டார்கள். அது மட்டுமல்ல முக்கால முணர்ந்த வள்ளுவனின் அறம் பொருள் இன்பம் இக்காலத்துக்கு எப்படி பொருந்தும் என்று கேட்கிறார்கள்; இல்லை இல்லை துணிந்து ஏட்டிலே தீட்டுகிறார்கள் — அவர்களது எண்ணமும் எழுத்தும் இந்தக் கருத்தைத்தான் பிரதிபலிக்கிறது. கம்யூனிஸ்ட்டுகளுக்கு எங்கோ பிறந்த காரல் மார்க்ஸ் தெரியும், லெனினை அறிவர். மறைந்த ஸ்டாலினுடன் நேரே பழகியவர்கள்போல வானளாவப் புகழ்வர். அதே கம்யூனிஸ்ட்டுகள் இந்த மண்ணிலே பிறந்து இந்த மண்ணுக்குழைத்த மனித குல மேதைகளின் அறிவுரைகளை ஏற்கமாட்டார்கள். அறிஞர்கள் என்றால் அவர்கள் சோவியத்திலும், சீனத்திலும்தான் பிறக்க முடியும், வேறு நாட்டில் பிறந்துவிட்டால் அவர்கள் அறிஞர்கள் அல்ல. சிகப்பு முத்திரை பதிக்காத எவரும் அறிஞராக முடியாது.

ஆகவேதான் திராவிட இயக்கம் கம்யூனிஸ்ட்டுகளின் எண்ணத்தை சந்தேகிக்கிறது—நடைமுறையில் ஐயம் கொள்கிறது. காரணம் நிகழ்கால அனுபவம் அந்த கருத்தைத்தான் உற்பத்தி செய்ய முடியும். நிலைமை இது தான்; திராவிட இயக்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படைக் கொள்கையான கம்யூனிசத்தை ஏற்றுக்கொள்கிறது. ஆனால்

னிஸ்ட்டுகட்சியின் வேஷத்தைக் கலைத்து உண்மை சொரூபத்தை உலகத்துக்குக் காட்டியது; பச்சோந்தி வேடம் பளிச்சென்றுத் தெரிந்துவிட்டது. அதைத் தொடர்ந்து திராவிட கழகமும் விளக்கமாகவே அறிவித்து விட்டது. "இனி திராவிடத்தில் ஒரே ஒரு பிரச்னைதான் உண்டு. திராவிட நாடு பிரிவினையை ஏற்றுக் கொள்கிறாயா? அப்படியானால் எனது நண்பன், இல்லையேல் எனது விரோதி என்று"

கம்யூனிஸ்ட்டுக் கட்சியிடம் தி. மு. கழகம் நேசக்கரம் நீட்டிய நேரத்தில் கூறிய கருத்துக்களை திராவிடர் கழகம் புரிந்து கொண்டு அதையே ஊர்ஜிதம் செய்து விட்டது.

அண்ணாவின் பாதையே அருமையான பாதை என்பதை கூறாமல் கூறி விட்டது விடுதலையும் அதைச் சார்ந்துள்ள இயக்கமும்.

தேர்தலின் போது திராவிட நாடு பிரிவினையை முன்னே வைத்தது தி. மு. கழகம் ஒன்று தான். ஆனால் ஏற்றுக் கொண்ட கட்சிகள் பலப்பல. பிற்போக்கு காங்கிரசும் முற்போக்கு என்று தன்னைக் கூறிக் கொள்ளும் கம்யூனிஸ்ட் கட்சியும்தான் இதை ஏற்க மறுத்தன.

எனவே நாட்டுப் பிரிவினை இன்று ஒரு கட்சியின் குரலாக மட்டுமில்லை. அது பொது மக்களின் பிரச்னையாகி விட்டது. இந்த சூழ்நிலையை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

மக்கள் சீனாவின் தலைவன் மா. சே. துங் தன்னுடைய நாட்டில் அமுலாக்கப்பட்டு வரும் புதிய ஜன நாயகத்தைப்பற்றி விளக்கங் கூறினர் "சீனாவின் புதிய ஜனநாயகக் குடியரசு மேலை நாட்டு மோஸ்தரைச் சேர்ந்த முதலாளித்துவக் குடியரசுனின்றும் வேறுபட்டது. மறுபுறத்திலே தொழிலாளி வர்க்கத்தினால் ஆளப்பட்டுவரும் மிகவும் நவீனமான சோவியத் மோஸ்தரைச் சேர்ந்த சோஷியலிஸ்ட் குடியரசினின்றும் இது வேறுபட்டது" என்று. இதே முறையில் பின் பற்றி ஏன் நாமும் நமது நாட்டிற்குகந்த முறையில் சோஷியலிச ஜனநாயகத்தை செயல் படுத்தக் கூடாது? அண்ணா கேட்கிறார் அறிவுள்ள வர்களைப் பார்த்து — சிந்திக்கத் தெரிந்தவர்களை நோக்கி—இந்தக் குரல் கம்யூனிஸ்ட்டுகளின் செவியில் மட்டும் ஏனோ சென்று சேர மாட்டேன் என்கிறது.

திராவிட நாடு பிரிவினைக்கான சூழ்நிலை இதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் கடந்த தேர்தலுக்குப் பிறகு நல்ல முறையில் உருவாகி வருகிறது. பாட்டாளி மக்களின் பாசறை, தொழிலாளர்களின் கோட்டை என்றெல்லாம் பூரிப்போடும் பெருமையோடும் பேசப்பட்டு வந்த வட நாட்டு பம்பாய் மாகாணத்தில் கம்யூனிஸ்ட்டுகளும் வேறு பல முற்போக்கு வாதிகளும் தோல்வியுற்றனர். அதே நேரத்தில் தென்னாட்டில் முற்போக்கு சக்திகள் நல்ல பல வெற்றிகள் பெற்று வாகைமாலை

காஞ்சீபுரமா?

நீ எந்தப்பாதையில்?

சூடின. காரணம் என்ன? வடக்கே கிடைக்காத வெற்றி தெற்கே தோன்றுவானேன்?

மக்களின் மனதிலே உள்ள தளைகளை அகற்றும் வேலையை—கருத்துப் புரட்சியை தொடர்ந்து நடத்தி வந்த திராவிட இயக்கத்தின் அடிப்படைப் பணிதான் இதற்குக் காரணம். வடக்கே திராவிட இயக்கம் இல்லை. தெற்கே பட்டி தொட்டி எங்கும் உண்டு. பாமர மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் உண்டு. எனவேதான் பண்பட்ட நிலமாக உள்ளது தென்னுடு – பிரிவினை கிதம் எழுந்தால் நிச்சயமாக இங்கே சமதர்ம வித்தை தூவ முடியும் பசுஞ்சோலையைப் பார்க்கலாம் — பலன் காணவு முடியும்.

நாட்டுப் பிரிவினைக்குப்பிறகு தான் பல நாடுகளின் நலிவுகள் போக்கப்பட்டன. இன்று பொதுவுடமை மணங்கமழும் சோவியத் பூமியும்கூட ஒரே நாடு என்று கருதப்பட்டு வந்த ஜார் மன்னன் காலத்தில் இருந்த நிலையைவிட, பல நாடுகளைக் கொண்ட கூட்டாட்சியாக விளங்கும் இன்று பலத்திலும், விஞ்ஞான வளர்ச்சியிலும், அறிவுத் துறையிலும், ஒற்றுமையிலும் வேறு பல முற்போக்கான வழிகளிலும் மிகவும் பெரும் அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பது கண் கூடான உண்மை — நேரில் கண்டோர் கூறும் செய்தி. இந்த அனுபவ ரீதியான உண்மையையும் தமிழ் நாட்டு கம்யூனின்ஸ்ட்டுகள் ஏற்க மாட்டார்கள்.

எனவேதான் தி. மு. கழகம் பற்பலத் துறைகளிலும் கூர்ந்து கவனித்துதான் கம்யூனிஸ்ட்டுகளைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. கம்யூனிஸ்ட்டுகளாயினும் சரி, வேறு எவர்களாயினும் சரி நாட்டுப்பிரிவினையை ஏற்க மறுக்கும் அத்தனை பேரும், திராவிடத்தை அடிமைப்படுத்தி அடக்கி ஆண்டு வரும் டில்லி ஏகாதிபத்தியத்திற்கு, தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்து கைக்கூலி பெறும் கங்காணிகள் என்று. இதில் முன்பின் உறவும் கிடையாது. முற்போக்கா? பிற்போக்கா? என்பதற்கும் இடமில்லை.

எனவே மாஸ்கோவை மதினுவாகவும், சீனத்தை பரமண்டலமாகவும் ஸ்டாலினை பரமபிதாவாகவும், 'காபிடலே' வேதவாக்காகவும் கொண்டு பார்வையை அங்கே வைத்து விட்ட தூரப் பார்வையினரைப்பற்றிஇனி நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. எண்ணினுல் பத்திருக்கும் அப்புல்லுருவிக் கூட்டத்திற்கு இனி தேய்வு காலந்தான். நமது கவலையெல்லாம் நாட்டு மக்களைப் பற்றியதே. ஆகவே நாட்டு மக்கள் முன்புள்ள—ஒவ்வொரு மனிதன் முன்பும் உள்ள கேள்வி, நீ நடைபோடவேண்டிய பாதை மாஸ்கோவா? அல்லது காஞ்சிபுரமா? என்பதுதான்.

உலகெங்கும் கம்யூனிஸ்ட்கட்சி உருவாகி உள்ளது என்பதை உணர்ந்தும், கம்யூனிஸ்ட் கட்சி இல்லாத நாடே உலகத்தில் இல்லை என்பதை படித்தும், மாஸ்கோவின் மணத்திலே மன்பதை மக்கள் சிந்தை குளிர்ந்திருக்கிற நேரத்தில்! நாட்டு மக்களைப் பார்த்து நாம்கேட்கிருேம் நீங்கள் எந்தப் பாதையில்?

மாஸ்கோ பாதை மக்கள் சமுதாயத்தை வாழவைப்பது இதை நாம் மறுக்கவில்லை. ஆனல் அந்த பாதையை சிந்தனை அற்றவர்கள் சூழ்ந்த சந்தி சிரிக்கும் இடமாக ஆக்கிவிட்டார்கள் தமிழ் நாட்டு கம்யூனிஸ்ட்டுகள். அண்ணு அன்று ஒரு நாள் கூறியதுபோல 'உண்மையான கம்யூனிஸ்ட்டுகள் நாம் தான்' என்ற துணிவிலும் தெளிவிலும் கூறுகிருேம், காஞ்சீபுரம் பாதைதான்—கடமை வீரர்கள் நிறைந்தது — களிப்பை தரக்கக்கூடியது.

காஞ்சீபுரம்—அதுதான் அண்ணுவின் பாதை—அந்தப் பாதையில் செல்வோருக்கு சொந்த கொள்கை இருக்கிறது, அதை செயலாற்றும் திட்டம் இருக்கிறது, சோர்வு தட்டாத இளைஞர் முன்னணி இருக்கிறது. நாட்டை முன்னேற்றும் நல்ல பல வழிகளை உணர்ந்தவர்கள்உண்டு.சோர்ந்து போன உள்ளங்களுக்கு சுறுசுறுப்பு தரும் 'டானிக்' அங்கே உண்டு.

அந்தப் பாதையில் நடப்போரைக் கண்டால் பழமை பயந்தோடும்–பகுத்தறிவு ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் – ஆரியம் அலறித் துடிக்கும் – மதம் மருண்டோடும் கடவுளைக் காட்டி காசு பறிக்கும் கயவர் கும்பல் கண்காணு இடத்திற்கு ஓடி மறைவர்.

செல்வாக்கு பெற்றுவரும் கொள்கைகளையெல்லாம் சேர்த்து அணைத்துக் கொண்டு ஊரானுக்குப் பிறந்த குழந்தையை உச்சி மோந்து உள்ளங் குளிரும் 'இரவல்' மங்கையல்ல 'காஞ்சீபுரம்'. கருத்துக்குகந்தது, கண்ணிய மிகுந்தது கடமை தவறுதது. உதட்டில் தேனும் உள்ளத்தில் நஞ்சும் கலந்ததல்ல.

கட்சி வெறியால் கலகம் விளைப்பவரல்ல. அரசியலில் இடம் பிடிக்கும் ஆர்வத்தால் அடிபிடி சண்டையில் ஈடுபட்டோரல்ல.

சூது அறியாதவர்கள், சூழ்ச்சியே தெரியாதவர்கள். சொல் வேறு செயல் வேறு கொண்டோரல்ல. விவேகத்தை இழக்காமல் அரசியல் நாகரீகத்தை வளர்ப்பவர்கள். அராஜகத்தை எட்டியும் பாராதவர்கள்.

கொண்ட லட்சியத்துக்காகக் கொடுமை பல அனுபவித்தவர்கள். கல்லடிபட்ட காலை கலங்கிடாமல், சொல்லடி கண்டு சோர்ந்து போகாமல் வெற்றி கிட்டும்வரையில் வேல்தனைக் கீழே போடாதவர்கள்.

நாட்டு விடுதலைக்காக நயவஞ்சகர்களின் அடக்குமுறையையும், நரிகளின் தாக்குதலையும் தாங்கிக் கொண்டவர்கள்.

'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது நமக்கே உரிமையாம் என்பதும் அறிந்தோம்' என்று சூளுரைத்துவிட்டு வாழ்வு பெற—பெற்ற வாழ்வைப் பெருந்தன்மை குன்றுமல் காக்க கிளம்பி விட்டனர். ஆட்சியைப் பெற்று விட்டால் போதும், பதவித்தேனை ருசிக்கிற நேரத்தில் பார்த்துக் கொள்ளலாம் பிறவற்றை என்று எண்ணுதவர்கள்.

காஞ்சீ பாதையில் நடக்க நெஞ்சிலே உறுதியும், நேர்மைத் திறனும் வஞ்சனை சிறிதும் அற்ற வாய்மையும் வேண்டும். மலை குலைந்தாலும் மனங் குலையாத மாண்பு மிக்கவர்கள் தேவை. வசையானுலும் வரவேற்கும் பண்பு தேவை. அறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி கவனப்படுத்தி வரும் 'எதையும் தாங்கும் இதயம்' நிச்சயம் தேவை.

வாய்ச்சொல் வீரர்கள் வேண்டாம்–வம்பளப்பவர்கள் வேண்டாம். பாயவிட்டு பின்னுல் பதுங்குவோர் வேண்டாம். இன்னலை ஏற்கும் திறனும் எதிர்ப்பை பொருட்படுத்தாத வலிமை உள்ளவர்களும் தேவை.

மீண்டும் கேட்கிருேம் தமிழ் நாட்டைப் பார்த்து ஏ தாழ்ந்த தமிழகமே! வீழ்ந்துபட்ட சமுதாயமே! நல்வாழ்வுபெற நீ நடக்க வேண்டிய பாதை எது? *

—வெற்றிவீரன்

இதுதான் சர்க்கார் உத்தியோகம்!

சர்க்கார் உத்தியோகத்துக்கு வேண்டிய மூன்று லட்சணங்கள் என்னென்ன என்று ஒரு ஆசிரியர் மிக அழகாய் வர்ணிக்கிருர்:

1. "என் அன்பரே! சர்க்கார் காரியாலயங்களிலே, ஏதாவது ஒரு தஸ்தாவேஜிக் கட்டை தேடிக்கொண்டே யிருப்பார்கள். ஆகையால் முக்கியமோ, இல்லையோ உம்மிடம் வரும் ஏதாவதொரு தஸ்தாவேஜை 'கடப்'பில் போடும்; அழுங்கிவிடும்; இழந்துவிடும்; அழித்துத் தொலைத்துவிடும். பிறகு அது தேவைப்படும் பொழுது எல்லாரும் உம்மிடம் வருவார்கள்; யாரைக்கேட்டாலும் உம்மையே குறிப்பிடுவார்கள். நீர் முக்கியமான பெரிய மனிதர் ஆகிவிடுவீர். உமக்கு வெகு சீக்கிரம் உத்தியோக உயர்வு கிட்டும்.

2. "அதிசீக்கிரத்திலே, நீர் ஒரு உதவி உத்தியோகஸ்தரைப் பெற முயலவேண்டும். ஏனெனில், எவனுக்கும் அவன் கூப்பிட்ட குரலைக் கேட்கப் பக்கத்திலே மற்ருருவன் இல்லாவிட்டால் அவன் எவனுமாகான்.

3. "இரண்டு மேல் வேஷ்டிகள் எப்போதும் உம்மிடம் இருக்க வேண்டும். நாற்காலியில் ஒன்றைச் சாத்திவிட்டு, மற்றொன்றைத் தோளிலே மாட்டிக்கொண்டு, விருந்துக்கோ வேடிக்கைக்கோ, உமது மனைவியுடனே அல்லது வேருருத்தனின் மனைவியுடனே, நீர் உல்லாசமாகப் போய்வாரும். ஆபீஸிலே யாராவது வந்து நீர் எங்கே என்று கேட்டால், 'அவரை உள்ளே காணேம்; ஆனல் அவர் பக்கத்திலே எங்கேயாவது இந்தக் கட்டிடத்துக்குள்ளேதான் இருப்பார். ஏனெனில், அவரது மேல் வேஷ்டி நாற்காலியில் இருக்கிறது' என்று உமது உதவியாளர் சொல்லிக்கொள்வார்."

பலி பீடத்தில்...

சரித்திர ஏட்டிலே புதைந்திருக்கும் ஓர் சோக வரலாறு
—'பலி பீடத்தில்'

அன்னிய ஏகாதிபத்திய வெறியர்களுக்கு ஆராதனைகாட்டி வரவேற்புரை வாசிக்கப்பட்ட ஏமாளி சரித்திரத்தின் முதல் அத்தியாயம்—'பலி பீடத்தில்'

பிருத்விராஜன்—ஜெயச்சந்திரன் என்னும் இரண்டு இராஜ புத்திர வேந்தர்களுக்கிடையே பொங்கிப்பாய்ந்த பகைமைவெள்ளத்தால் இந்நாட்டின் விடுதலை வாழ்வு மூழ்கடிக்கப்பட்டு அடிமைச் சேற்றில் புதைந்து போனதின் துயர நிகழ்ச்சி—'பலி பீடத்தில்'

உண்மை நிகழ்ச்சிகளிலே சிறிது கற்பனையும் கலந்து பின்னப் பட்ட ஓர் நெஞ்சுருக்கும் நாடகம்—'பலி பீடத்தில்'

இதோ, அந்த வேதனை நாடகத்தின் முதல் காட்சி......!

தோற்றம் ஒன்று

[கன்னோசி நாட்டின் அரண்மனையில் புயல் உருவில் ஜெயச்சந்திரன். அமைதி உருவில் அமைச்சர், படைத்தலைவர்.]

ஜெயச்சந்திரன் :—அவமானம்! அவமானம்! என் பரம்பரைக்கே அவமானம்! இனி என்னால் எப்படி தலை நிமிர்ந்து வாழ முடியும்? எவன் என் தீராப் பகைவனாக யிருந்தானோ, அவனே இன்று என் பச்சைக் கொடிக்கு உரிமைக் கொண்டாடும் நிலை! எவன் என் ஜன்மசத்துருவாக யிருந்தானோ, அவனே இன்று என் அன்பு மகளுக்கு மணாளன் என்ற முறை! என்னால் தாங்கமுடியவில்லை இந்த அவமானத்தை! சகிக்க முடியவில்லை இந்த அவக்கேட்டை! இருதயத்தைத் துளைத்து இரத்தத்தைச் சுவைக்கும் வாள் என் இடையில்! இராஜ்யத்தை ஆண்டு அராஜகத்தை ஒழிக்கும் செங்கோல் என் கரத்தில்! வீர இரத்தத்தில் கழுவப்பட்ட அரியாசனம், குருதியாற்றிலே நீந்தி விளையாடிய நான், போர்க்களத்தில் வெற்றி வாகை சூடிய வீரர்படை இருந்தும் என்ன பயன் அமைச்சரே, என்னபயன்? வந்தவனுக்கு இடங்கொடுத்தோம்; அவன் என் அன்பு மகளைக் களவாடிச் செல்லும்வரைப் பார்த்திருந்தோம்! இதைவிட வேறு என்ன அவமானம் வேண்டும் நமக்கு? இன்னும் நான் மன்னன் என்ற பெயரிலே உலவிக் கொண்டிருக்கிறேனே.........! நானா இந்தக் கன்னோசி நாட்டுக் காவலன்? இல்லை, இல்லை.......

அமைச்சர் :—வேந்தரே! சற்று அமைதியாக இருந்தால்....

ஜெயச்சந்திரன் :—அமைதி! எங்கே அந்த அமைதி? பெற்றெடுத்த குலக் கொடியை அந்தக் கொடியோன் கொள்ளையடித்துச் சென்ற பிறகா? என் திருவிளக்கை அந்தத் தீயவன் திருடிக் கொண்டு போன பிறகா? எல்லா நாட்டு மன்னர்களும் கூடியிருந்த சுயம்வர மண்டபத்தில் என் வம்சப் புகழை முறியடித்த அந்த முட்டாளின் துணிச்சலைக் கண்ட பிறகுங் கூடவா, எனக்கு அமைதி? எங்கே யிருக்கிறது அமைச்சரே, அந்த அமைதி? குமுறும் என் இருதயத்திலா, கொந்தளிக்கும் என் எண்ணத்திலா? அமைச்சரே, கலிங்கத்து வேந்தன் என்னை இகழ்ந்தானும்! காந்தார மன்னன் கேலி மொழி பேசினனும்! விந்திய நாட்டரசன் என்னைப் பார்த்து பழித்தானுமே...! வீரமற்ற பொட்டுப் பூச்சியென்றல்லவா நினைத்துக் கொண்டார்கள் வந்திருந்த முடிதாங்கிகளெல்லாம்! மானமற்றவன், உணர்ச்சியற்றவன் — என்றல்லவா பழித்தார்கள்! இகழ்ந்தார்கள்! யாரால் இந்த சூழ்நிலை எனக்கு? யாரால் அமைச்சரே? அந்தத் தருக்கனால்! அந்தத் தீயவனால்....!

அமைச்சர் :—மன்னரே....

ஜெயச்சந்திரன் :—நீர் பேச வேண்டாம்! பேசி, எரியும் என் மனதில் சந்தனத் தூளை தூவ வேண்டாம்! வெந்துபோயிருக்கும் என் நெஞ்சிலே ஆயிரம் வேல்களென வீச வேண்டாம்....என் ஜன்மப் பகைவன்! பரமவைரி...பிருத்வி...பிருத்வி....ஏ, பிருத்வியே! மூளையற்ற சிறுவனே! தோளில் வலிமையற்று வாளை சுழற்ற முடியாமல் கோழையைப் போல மறைந்திருந்து என் அன்பு மகளைச் சூறையாடிச் சென்றவனே! உன் டில்லி கோட்டையிலே என் கொடி பறக்க விடுகிறேன்! ஆஜ்மீரத்தை அக்கினிக்கு இறையாக்குகிறேன்! என் வம்சத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை உன் சூடான இரத்தத்தைக் கொண்டு கழுவிக் கொள்கிறேன்! உன் விலா எலும்புகளைப் பொடிப்பொடியாக்கி எனக்கேற்பட்ட மாசைத் துடைத்துக் கொள்கிறேன்! பிருத்வியே! இது என் வீரவாளின் மீது ஆணை! இந்நாட்டு அரியாசனத்தின் மீது ஆணை!...படைத்தலைவரே!

படைத்தலைவர் :—மகாராஜா!

ஜெயச்சந்திரன் :—நாளைக்காலையே போர் முரசு கொட்டட்டும்! அதன் ஒலி கேட்டு அந்தக் கசடனின் உள்ளம் அதிரட்டும்!....உம்... வேண்டிய ஏற்பாடுகளை உடனே துவக்கும்!

அமைச்சர் :—கொற்றவரே! கோபம் வேண்டாம் என் மீது! தாங்கள் இட்ட சபதம் உங்கள் வீரத்தை நிலை நாட்டும் தங்கப் பட்டயம் தான்! ஆனால்....

ஜெயச்சந்திரன் :—ஆனால்...? என்ன, ஆனால்?

அமைச்சர் :—புயலிலே மனங்குளிராது மன்னரே! தென்றலிலே தான் குளிரும்!

ஜெயச்சந்திரன் :—உமது பேச்சு....

அமைச்சர் :—வாள் வீச்சை விட கூர்மையான தென்று தாங்களே கூறியிருக்கிறீர்கள்! புயல் உருவில் திட்டம் தீட்டியவர்களெல்லாம் தீய்ந்து போயிருக்கிறார்கள் மன்னா! ஆனால் தென்றலைப் போல காரியத்தை நிறைவேற்றியவர்கள் வெற்றியின் எல்லையைத் தொட்டிருக்கிறார்கள் — இந்த உண்மையைத் தாங்கள் சரித்திரத்தில் படிக்காததல்லவே!

ஜெயச்சந்திரன் :—அதற்காக....?

அமைச்சர் :—தங்கள் மனதிலே புயல் வீசுவதற்கு மாறாக தென்றல் தவழவேண்டும்! சிறிது காலம் வரைப் பொறுத்திருந்தால் தக்க நேரம் வரும்போது அந்த மூடனைத் தீர்த்து விடலாம்; சபதத்தையும் நிறை வேற்றலாம்!

ஜெயச்சந்திரன் :—அமைச்சரே....என் மனதைக் குழப்புகிறீர்...

அமைச்சர் :—அமைதி தேவை அரசரே....!

ஜெயச்சந்திரன் :—சரி...உம் எண்ணம் போலவே யாகட்டும்....!

தோற்றம் இரண்டு.

[டில்லி அரண்மனையின் உத்யான வனத்தில் பிருத்விராஜன், சம்யுக்தை, மகிபாலன்.]

பிருத்விராஜன் :—மேலே இன்ப நிலா, கீழே அழகுப்பூஞ்சோலை, இடையே குளிர் தென்றல், நடுவே பளிங்கு மேடை—அதன் மீது நாம்! இதுதான் காதலரின் சொர்க்கவாழ்வு கண்ணே! அம்பிகாபதியும் அமராவதியும், அன்பே, நம்மைப்போலத்தான் இந்த இன்ப இரவைக் கழித்திருப்பார்கள்! சகுந்தலையும் துஷ்யந்தனும்....

சம்யுக்தை :—துஷ்யந்தன்!

பிருத்விராஜன் :—ஏன், திடுக்கிட்டாய்?

சம்யுக்தை :—இந்த இன்ப இரவிலே துஷ்யந்தன் நினைவு வேண்டாம், கண்ணாளரே! சகுந்தலையல்லவே, நான்—துஷ்யந்தனை நினைத்துக் கொள்ள! அமராவதி! காதலனோடு பலி பீடத்தை நோக்கிச் செல்லும் காதல் நெஞ்சுரம் கொண்டவள்!

பிருத்விராஜன் :—பலி பீடத்தை நோக்கி நடக்கும் அம்பிகாபதியாக நானிருந்தாலல்லவா, நீ என்னைப் பின் தொடர வேண்டும்?

சம்யுக்தை :—என் உள்ளம் கலங்கியபடி இருக்கிறது ஆருயிரே......

பிருத்விராஜன் :—கலக்கமா? எதற்காக? எங்கே, இப்படி உன் நிலா முகத்தைத் திருப்பு....இதென்ன? கண்களிலே கண்ணீர்?

சம்யுக்தை :—ஆனந்தக் கண்ணீர்! உங்கள் அழகு உருவத்தை நினைத்து நினைத்து கன்னோசியிலே நான் ஏங்கித் கழித்த அந்தச் சோக இரவுகள்....தங்கள் பரந்தமார்பிலே காதல் ராஜ்யத்தைக் காணும் இந்த இன்ப இரவுகள்....இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்த போது, கண்ணாளரே, என் நெஞ்சில் எழுந்த ஆனந்த வெள்ளம் என் கண்களிலே கண்ணீராகத் தெரிந்து விட்டது உங்களுக்கு!

பிருத்விராஜன் :—சம்யுக்தா! நான் மட்டும் உன் நினைவற்றுயிருந்தேன்? மின்னிடும் வாள் முனையிலே உன் கண்ணொளியைக் காண்பேன்! தவழும் தென்றலில் ஆடும் பூங்கொத்தில் உன் எழில் சாயலைப் பார்ப்பேன்! படிக்கும் கவிதைகளிளெல்லாம் உன் அழகு உருவம் படிந்திருப்பதை உணர்வேன்! கண்ணே! உலகமே உன் உருவில் தெரிந்தது எனக்கு!

சம்யுக்தை :—என் நினைவு உங்கள் நெஞ்சைவிட்டு....

பிருத்விராஜன் :—அகலாது சம்யுக்தா! நான் பிருத்விராஜன்! உறையிலிருந்து வாளை எடுக்கமாட்டேன்; எடுத்தால் பகைவனைக் கொல்லாமல் விடமாட்டேன்! போர்க்களத்தில் குதிக்காமலிருப்பேன்! குதித்தால் வெற்றி காணாமலிருக்கமாட்டேன்! என் நெஞ்சைக் கவர்ந்தவளே! தெவிட்டாத கொம்புத்தேனே! உனக்காகப் பல நாட்கள் காத்திருந்தேனே, நானா உன் நினைவற்று இருப்பேன்? என்னை ஓர் காவல்காரனாக சுயம்வர மண்டபத்தின் வாசலிலே சிலை செய்து வைத்திருந்தாரே உன் தந்தை, அவர் ஆணவத்தை வாள் முனையில் ஒடுக்காமல் விட்டது ஏன்? ஏன்? உனக்காகத்தான்! உன் அன்புக்காகத் தான்!

சம்யுக்தை :—போதும் கண்ணாளரே, போதும்! எனதுள்ளத்தில் பொன்னொளியைப் பாய்ச்சி விட்டீர்....

பிருத்விராஜன் :—சுழலும் வாளோடு புரவியிலே உன்னைத் தூக்கி வந்தபோது எனக்கேற்பட்ட ஆனந்தத்தைச் சொல்ல ஓர் இன்பக் காவியம்தான் இயற்ற வேண்டும், சம்யுக்தா !

சம்யுக்தை :—இன்னுயிரே.... ....

பிருத்விராஜன் :—அன்புயிரே... ... .

[அழைப்பு மணி அடிக்கப்படுகிறது, ஆலோசனைக் கூடத்திலே. இன்ப போதையில் மெய்மறந்திருந்த பிருத்வி, திடுக்கிடுகிறான்.]

பிருத்விராஜன் :—சம்யுக்தா ! ஏதோ, அவசரச் செய்தி ! இரு, இதோ வருகிறேன்......

[ஆலோசனைக்கூடத்தில் நுழைகிறான் பிருத்வி. அங்கே துடிக்கும் உள்ளத்தோடு நின்று கொண்டிருக்கிறான் மகிபாலன்.]

பிருத்விராஜன் :—மகிபாலா ! என்ன இந்நேரத்தில் ?

மகிபாலன் :—ஓர் விருந்தூட்டும் செய்தி மன்னரே ! நம் வீரத்தை யறியாத வகைகெட்ட வீணன் ஒருவன் நம்மிடம் வாலையாட்ட வந்துகொண்டிருக்கிறானாம் ! பெயர் முகமது கோரி, நாடு ஆப்கானிஸ்தானம், அதன் தலைநகரமும் கோரிதான். ஒற்றர் தலைவர் ஒப்படைத்த செய்தியிது !

பிருத்விராஜன் :—கோரி ! கஜனி மாமூதின் அதே பரம்பரை ! அதே குணம் ! அந்தக் கயவனைப் போல நம் தேசத்திற்குள் நுழைந்து செல்வக் குவியலைக் கொள்ளையடித்துச் செல்லலாம் என்ற நினைப்பா இந்த நிலைகெட்ட நாடோடியின் பிரதிநிதிக்கு? நுழையட்டும்—நுழைந்து நம் வேல் முனையின் கூர்மையை உணரட்டும். இரஜபுத்திர வம்சத்தின் வீரத்தை எடைபோட வருகிறானா வாள் பிடிக்கத் தெரியாத இந்தப் புல்லன்? வரட்டும்—வந்து நம் வாள் வீச்சின் வலிமையை அறியட்டும் !

மகிபாலன் :—இன்று கோரி ! அன்று கஜனி !

பிருத்விராஜன் :—கஜனி ! சோம்நாதபுரக் கோயிலின் செல்வத்தைச் சூறையாடியவன் ! இந்நாட்டு மக்களைக் கொன்று மலையெனக் குவித்தவன் ! அன்று சோமநாதபுரர் விட்டார் அவனை ! இன்று நான் விடமாட்டேன் இவனை ! கோரி வருகிறானா ? வரட்டும்.... ... பழிக்குப் பழி ! பழிக்குப் பழி ! மகிபாலா போர் முரசு கொட்டட்டும் ! முரசொலி கேட்கட்டும் ! அந்த மடையன் அஞ்சி நடுங்கும் விதத்தில், தளபதியே, உன் திறமை மிக்க அணிவகுப்பில் மறக்குடி வேலர்கள் சேரட்டும் ! உம்........உடனே திரளட்டும் படைகள் ! மகிபாலா ! சிற்றரசர்களுக்கெல்லாம் உடனே உதவி தேவையென ஓலை அனுப்பிவிடு.... ....ஏன் இன்னும் நின்று கொண்டிருக்கிறாய் ?

மகிபாலன் :—மற்றொரு செய்தி.......கன்னோசி நாட்டின் கொற்றவர்—ராணியவர்களின் தந்தை—ஜெயச்சந்திரர்—தங்களை ஒழிக்காமற் போவதில்லையென சபதம் செய்திருக்கிறாராம் !

பிருத்விராஜன் :—சபதமா ! என்னை ஒழிப்பதென்றா ! விளக்கிடம் வீரம் பேசும் விட்டில் பூச்சி, வேங்கையை நோக்கித் துள்ளிப்பாயும் வெள்ளாடு—இவைகளை யார் மதிக்கப் போகிறார்கள் ? கிடக்கிறான் மடையன் !

தோற்றம் மூன்று

[கன்னோசி நாட்டு அரண்மனையில் ஜெயச்சந்திரன், அமைச்சர், படைத்தலைவர்.]

படைத்தலைவர் :—மகாராஜா ! முகமது கோரி தோல்வியடைந்துவிட்டாராம் ! புறமுதுகு காட்டி ஓடிவிட்டாரம் !

ஜெயச்சந்திரன் :—கோழை ! கஜனி மாமூதின் வழித்தோன்றலா இவன் ? பேடியின் சின்னம் ! பிருத்வி மண்டியிடுவான்—கண்டுகளிக்கலாமென்று கருதினேன் !

படைத்தலைவர் :—இப்போது மட்டும் என்ன.......?

ஜெயச்சந்திரன் :—என்ன கூறுகிறீர்.......?

படைத்தலைவர் :—அமைச்சர் அன்று சொன்னதுபோல, உங்கள் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய பொன்னான சந்தர்ப்பம் இதுதான் மன்னரே ! வெற்றிகீதத்தில் மெய்மறந்திருக்கிறான் பிருத்வி ! தோல்வித் துயரத்தில் மனங் குமுறிக்கொண்டிருக்கிறார் கோரி ! இந்த இருவருக்கும் இடையில் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கும் நீங்கள்......

ஜெயச்சந்திரன் :—புரியும்படி சொல்லுமய்யா !

படைத்தலைவர் :—பிருத்வியின் இருதயத்தைக் கசக்கிப் பிழிந்து அவன் இரத்தத்தை இந்த அவைக் கூடத்திலே தெளிப்பதற்கு ஓர் அருமையான வழி......நீங்கள் உடனே ஓர் சின்னஞ்சிறு ஓலையைக் கோரிக்கு அனுப்பினால்—அவருடன் நீங்களும் சேர்ந்தால்—இருவரும் சேர்ந்து பிருத்வியை ஒழித்துவிடலாம் !

ஜெயச்சந்திரன் :—மந்திரியாக இருக்கவேண்டியவர் ; படைத்தலைவராக யிருக்கிறீர் !

அமைச்சர் :—வேண்டாம் அரசரே ! வேண்டாம் ! படைத்தலைவர் கூறுவது விபரீத யோசனை !

ஜெயச்சந்திரன் :—விவேகமற்றுப் பேசுகிறீர் ? எது விபரீத யோசனை ? கோரியிடம் உதவி கேட்பதா, விபரீதயோசனை !

அமைச்சர் : ஆம் ; அரசே ! விபரீத யோசனைதான் ! உள் நாட்டுப் பகைவனை ஒழிக்க வெளிநாட்டுப் பகைவனை வரவழைப்பது விபரீதம்தான் !

ஜெயச்சந்திரன் : கோரி என் நண்பன்.... ....

அமைச்சர் : பூவிலே பூ நாகம், கனியிலே புழு, கொடுவாளிலே நஞ்சு—இருக்காது என்று யார் நிச்சயமாகக் கூறமுடியும் வேந்தே ? பிருத்வியும் தாங்களும் ஒரே இராஜபுத்திர வம்சத்தைச் சார்ந்தவர்கள், வளர்ந்தவர்கள் ! உங்கள் இருவருக்கும் இடையில் பகை பல இருக்கலாம் ; தடை பல நேரலாம் ! அதற்காக ஓர் அன்னியனுக்கு வரவேற்புரை வழங்குவதா ? வேண்டாம் வேந்தே ! வருங்கால சரித்தித்திரம் தங்களை இகழும், பழிக்கும் ! உடலைப் பாதிக்கும் நோய்க்காக உயிரையே போக்கிக்கொள்வது நல்லதல்ல......!

ஜெயச்சந்திரன் : என்ன கதை கதைக்கிறீர்.......?

அமைச்சர் :—கதைதான் அரசே ! கற்றெறும்பு புற்றெடுக்க அதில் கருநாகம் குடிபுகுந்த கதை !

ஜெயச்சந்திரன் :—போதும் உமது ராஜதந்திரம் ! படைத் தலைவரே... ....! ஒற்றர் தலைவரைக் கூப்பிடும்... ....வேண்டாம், வேண்டாம் ! இதோ, இந்த ஓலையை அவரிடம் சேர்த்திடும் ! உடனே கோரியிடம் சேரவேண்டுமென நான் சொன்னதாகச் சொல்லும் ! பிருத்வி......! போர்க்களத்தில் கூடிய சீக்கிரம் சந்திக்கிறேனடா, உன்னை !

அமைச்சர் :—மன்னரே ! நான் பதவியை இராஜிநாமா செய்கிறேன் !

ஜெயச்சந்திரன் :—ஆயிரத்தில் நீர் ஒருவர் தான் உண்மை மந்திரி ! செய்யும் உமது விருப்பம்போல் ! (தொடரும்)

—அண்ணா அன்பன்

வெளி வந்துவிட்டது!

கவிஞர் கண்ணதாசன் தீட்டிய

ஈழத்து ராணி

விலை ரூ. 1—0—0

விற்பனையாளர் கழிவு 25 சதவிகிதம். முன்பணம் அனுப்பியோ, வி. பி. மூலமோ பெற்றுக்கொள்ளுங்கள். தேவைக்கு உடனே தெரிவிக்கவும்.

அருணோதயம்

சென்னை—14

கவிஞன் ரோஜா மலர்களைப் பார்த்தான் ; அழகு தெரிந்தது ; முகர்ந்தான் ; மணம் தெரிந்தது, பறித்தான் ; மனங்குளிர்ந்தது. கசக்கினான் ; பாழாய்ப் போய்விட்டது.

உடனே பெண்களை "ரோஜா மலரே !" என்று வர்ணிக்க ஆரம்பித்தான் ! நானும் உன்னை அப்படியே வர்ணிக்கிறேன் ; அதை மாற்றிச் சொல்ல எனக்கு ஆசையில்லை. என் காதலியே ! உன்னை உடலோடு உடலாகக் கட்டி அணைக்கும்போது எங்கே நீ பாழாய் விடுவாயோ என் ஆலிங்கனத்தால், எங்கே உன் உடல் கசங்கிவிடுமோ என்றெல்லாம் கலங்குகிறேன் ! தொட்ட இடம் சிவந்து போகிறது ; முத்தம் பட்ட இடத்தில் சிவப்பு மையால் அச்சடிக்கப் பட்டது போல் இருக்கிறது ! பிறப்பில் பெண்கள் காட்சிச் சாலையில் வைக்கப்படவேண்டியவர்கள் ! என் மனங் கொண்ட மரகதமே ! எங்கே உன் முகத்தைக் காட்டு—இப்படி—இப்படி—கன்னத்தைத் திருப்பு ! நான் பைத்தியக்காரனாக உன் கண்களுக்குக் காட்சி தருகிறேனா ? சம்பந்தமில்லாமல்—தொடர்பில்லாமல் பேசுகிறேனா ? என்னைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறதா ?

ஏன் சிரிக்கிறாய் ? என் சிறுமையைக் கண்டா ? என் முகம் இப்போது கோழைத் தன்மையோடு காட்சியளிக்கிறதா ?

நான் உன் கண்களுக்குக் குழந்தை மாதிரி தட்டுப் படுகிறேனா ? என் கண்கள் கலங்கிப் போய்க் காட்சியளிக்கின்றனவா ? ரோஜா மலரே ! உன் செங்கனிவாய் இதழ்....ஆ ! ஏன் இப்படி வாய் விட்டுச் சிரிக்கிறாய் ! முல்லைவரிசையை கோவைப் பழங்கள் மூடிக் கொண்டிருந்ததோ ? இப்போது தான் அவற்றைக் காட்சிக்கு வைக்கிறாய் ! ஐயோ ! என் கண்ணே ! நீ என்னை பித்தர்கள் விடுதியில் வேண்டுமானால் சேர்த்து விடு ; இப்போது ஒரே ஒரு முத்தம் கொடுத்து விடு !

—ஜோகன்ரீதர்

இவனன்றோ கவிஞன்

நெய்தல் நிலத்தின் ஒரு பகுதி. நிமிர்ந்து நடக்கும் வீரர்கள் உள்ள சேர நாட்டின் ஒரு பிரிவான மாநத்தை என்கின்ற நகரம், இயற்கை அழகுக் குறைவில்லாதவை. அங்குள்ள ஊரை எவ்விதம் பார்த்தாலும் மணம் வீசும் மலர்கள் மலிந்து கிடந்தன. அதனூடே வானளாவிய புன்னை மரங்கள் மிகவும் பரந்து வளர்ந்திருந்தன. அதோடு மட்டும் அந்த சேர நாட்டு நகரம் அடங்கி விடவில்லை; நீண்டு வளர்ந்திருக்கும் தென்னை மரங்கள், தன் அழகிய ஓலையை நாற்புறமும் விரித்து அழகு படுத்திக் கொண்டிருந்தது. மற்றொரு புறம் இயற்கை மலைகளில், எல்லோரும் கண்டு இன்புறும் வண்ணம் மக்களின் வாழ்க்கைகுத் தேவையான பொருள்கள் மலிந்து கிடந்தது. அந்நாட்டு மலையில் வீரம் பொருந்திய களிறுகள் இருந்தன. விலையுயர்ந்ததும், அயலார் மிக மிக விரும்புவதுமான மிளகும், மயில் இறகும் ஏராளமாக இருந்தன. இவ்வித இயற்கைச் செல்வங்கள் தவழும் சேர நாட்டின் தலை நகரந்தான் கருவூர் எனவும், 'வஞ்சி'யெனவும் அழைக்கப்படுவனவாகும். அதன் கண் மாட மாளிகைகளும், மணியரங்குகளும், (நடன சாலை) அத்தாணி மண்டபமும் ஏனைய வைகளும் நிரம்பப் பெற்றிருந்தன. அவ்வஞ்சி என்கின்ற தலைநகரம் 'உறையூரிற் பெரிது கருவூர்' என்று தொல் சொல், 106-ல் விளக்கமாகத் தெரிகின்றது. இத்தகைய வானளாவிய தலைநகரையும், பொருளும் இயற்கை பூம்பொழிலும் கொண்ட வாழ்ந்த பைந்தமிழ்ப் புரவலனான கோதை, ஒரு நாள் நகரைச் சுற்றி வலம் வருகிறான். எல்லோரும் அவனை மருண்டு மருண்டு பார்த்துக் கொண்டே இருக்கின்றனர். அவனது இயற்கை அழகைக் கண்டு அணங்குகள், தென்றலைக் கண்டு குயில் தன் இனிமையான இசையை மெய்மறந்து பாடுவது போல், அவ்வழியில் நின்றிருந்தவர்கள் தன்னிலை இழந்து கிடந்தனர். எல்லாம் இளமை தரும் துன்பம். கயலையொத்த கருவிழிகளெல்லாம், அவனை விழுங்குவதுபோல் பார்த்துக் கொண்டே இருந்தது. அவ்வித மகளிரில் ஒருவள் தன் உயிரே போய்விட்டது போல் எண்ணுகிறாள். காரணம், அந்தக் கொற்றவன் மார்பில் பதிந்திருந்த மணிபதித்த பொற்பூண்; அவளை மெய் மருளச் செய்ததுதான்! அவன் சூடியிருந்த மலர் மாலை, தேரின் அசைவால் அங்கும் இங்குமாக ஆடி அழகு செய்து கொண்டிருந்தது. அவன் கையில் தாங்கி வரும் பளபளப்பான வேல், பகைவரைச் சீறுவது போல் தோற்றமளித்துக் கொண்டிருந்தது. இவ்வளவும் கண்ட அந்தத் தலைவி, தன்னை மறந்து 'இவைகள் — இந்த ஆபரணங்கள் பெற்றுள்ள பலனைக் கூட நாம் பெறவில்லையே!' என்று கருதியவாறு விம்மலுறுகிறாள். அவனது பரந்த மார்பு அவளின் கண்ணில் புகுந்து, உள்ளத்தில் பதிந்து துன்புறுத்துகிறது. இதற்கிடையே மனதையே அந்தக் கொற்றவனிடம் தூதாக அனுப்புகிறாள். அவன் மட்டும் எதையும் காணாதவன் போல் சென்று கொண்டிருக்கிறான். அவள் துயரம் அதிகமாகிறது; அவனைப் பழிக்க அவள் முற்படுகிறாள். 'என்னுடைய நிலைமை அறிந்து கொள்ளாமல் செல்கிறானே; இவனா நீதி மன்றத்தில் நல்ல தீர்ப்பை வழங்குவோன்? இவனோ மன்னன்? இச் சிற்றிடையாளின் துயரத்தையே கண்டு பிடிக்க இயலாதவனா ஆட்சி புரிபவன்?' என்று ஆத்திரத்தில் சொல்ல முடியாமல் மனதிற்குள்ளேயே சொல்கிறாள். எல்லாம் அவனைத் துருவித் துருவி பார்த்ததின் விளைவாக நேர்ந்தவைதான். அந்நேரத்தில் பார்க்காமல் இருக்கலா மென்றாலோ அவளால் முடியவில்லை; மனவேட்கை, தன்னையும் மீறி தூண்டுதலுக்கு இசைந்து அவனை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தது. அதன் விளைவாக கண்ணீர் வடிக்கிறாள் அவள். தெருக் கோடியில் அவன் சென்று கொண்டிருக்கிறான். அவளுள்ளம் தணலில் பட்ட புழுப்போல் துடிக்கிறது. பருவமென்னும் சட்டம், அவளை வெளியில் தலைகாட்டாமல் செய்து விட்டது. 'தொடிற் சுடின் அல்லது காமநோய் போல- விடிற் சுடல் ஆற்று மோதீ' என்ற பொய்யா மொழியின், மெய்யுரைக்கேற்ப அவன் தொலைவாகக் கடந்தாலும், அவள் கொண்ட காதல் நோய் சுட்டெரித்துக் கொண்டே இருந்தது.

சில நிமிடத்திற்கெல்லாம் அவன் மறைந்தான்; இருள் சூழ்ந்தது. வீட்டினுள் நுழைந்தாள் அவள். தெருக்கள் தோறும் விளக்கொளி திகழ்ந்தது. இருப்பினும் அவ்விளக்கெல்லாம் மங்கலாகவே காட்சியளித்துக் கொண்டிருந்தது. காரணம், பனியின் தொல்லைதான். இந்தத் தொல்லை, விளக்கொளியை மட்டும் தீண்டவில்லை; அவளையும் தீண்டியது. மார்கழி மாதமாகையால் வெளியில் தலைகாட்டா வண்ணம் 'சோ'வென பெய்து கொண்டிருந்தது. அவ்வேளையில் அவனிடம் சென்ற மனம் திரும்பி வரவில்லை; அவளுக்கு உறக்கமும் உண்டாகவில்லை; நிலை கலங்கி நின்றாள். அவளின் கண்களில் கண்ணீர் ததும்பி நிற்கிறது. தன்னால் முடிந்த வரையில் அந்தப் பாசத்தைவிட்டு விலகவேண்டுமென முயற்சித்தாள்; முடியவில்லை, தோழியை 'ஓவென' அறை கூவி அழைக்கிறாள். என்னவோ- ஏதோவென்று எண்ணியவாறு தோழி, ஓடோடி வருகிறாள்.

"தலைவி! யாது நேர்ந்தது?" என்ற பரபரப்போடு அவளைத் தொட்டுப் பார்க்கிறாள்; நடுக்கங் கொண்ட கைகளைவிட வேறொன்றும் அவளுக்குத் தெரியவில்லை. இதற்கிடையே அவள், 'இங்கு வீசும் பனிவாடையை என்னால் தாங்க இயலவில்லை; ஆகவே ஒரு போர்வை கொண்டுவா!' என்று தனது அன்புத் தோழிக்குத் தெரிவிக்கிறாள். அவளும் போர்வையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, 'காய்ச்சலாக இருக்குமோ? அல்லது நடுக்கத்தினால்....?' என்கின்ற ஐயப்பாடுகளுக்கிடையே அவளின் உள்ளம் இருக்கிறது. போர்வையைப் பெற்ற தலைவி, அதனை விரித்து போர்த்திக் கொள்கிறாள். மறுமுறையும் தனது உயிர்த்தோழியை நோக்கி, 'தோழி! முன்னமேயே உன்னிடத்தில் ஒரு செய்தி கூறினேனே; ஞாபக மிருக்கின்றனவா?' என்று கேட்கிறாள்.

'என்ன அது ஞாபகமில்லையே...!' என்கிறாள் அவள்.

'என்னுள்ளம் அந்த அரசனோடு—என் மனதைக் கவர்ந்த கள்வனோடு சென்றிருப்பதாகக் கூறினேனே...அதற்குள்ளாகவா அதனை மறந்தனை?' என்றாள் அவள்.

'ஓ....அதுவா? ஆமாம்; அதற்கு இப்போதென்ன?' என்று ஒன்றும் தெரியாதவள் போல் நடித்து அவளின் உள்ளக் கிடைக்கையை எதிர் பார்க்கிறாள்.

'தோழி! என் காதலனைத் தேடிச் சென்ற என் மனதிற்கு, ஒரு போர்வையைக் கொடுக்காமல் போய் விட்டேனே! அது அங்கு என்ன பாடு படுகிறதோ? இந்தப் பாழாய்ப் போன பனியினால் எனக்கே இவ்வளவு நடுக்கமென்றால், தூது சென்ற என் உள்ளம் என்ன பாடு படும்? ஒருவேளை தன் கைகளையே போர்வையாக எண்ணி, உடலைப் பொத்திக் கொண்டு, அவனிடம் பேசும் செவ்வியை எதிர்பார்த்தவாறு ஏக்கம், இரக்கம், பனிக் கொடுமை, ஆகியவை சூழ்ந்து கொண்ட காரணத்தால்—அந்த அரண்மனை வாசற்புரத்திலே தங்கி விட்டதோ, என்னவோ தெரியவில்லையே எனக்கொன்றும் புரியவில்லையே? என் செய்வது? என்று கூறுகிறாள். வஞ்சியென்னும் தலைநகரத்திற்கு கொற்றவனாக இருக்கும் கோதையை நோக்கிச் சென்ற மனம், என்ன பாடு படுகிறதோ" என்று தலைவி கூறுவதைக் காண்கிறாள். இருப்பினும், 'நானுஞ் சேரனும் சேர்ந்து வாழ்வோம்' என்று மறைமுகமாக எடுத்துக் கூறும் தலைவியின் கருத்தை உணர்ந்த தோழி, 'தலைவி எண்ணுவதுபோல் நடந்தால் நல்லது தான்!' என்று தன் மனதிற்குள் கருதியவாறு, அவளை விட்டு அகன்று, படுக்கை அறைக்குச் செல்கிறாள் தலைவி தன் மனதைக் குறித்து வருந்தியவளாக வாளாயிருக்கிறாள்!

இவ்வித அழகான கருத்தைக் கொண்ட முத்தொள்ளாயிரப் பாடலை இனிது காண்போம்.

" கடும்பனித் திங்கட்டன் கை
போர்வையாக
நெடுங்கடை நின்றதுகொல்
தோழி—நெடுஞ்சின் வேல்
ஆய்மணிப் பைம்பூண்
'அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு"

—வே. கபிலன்

பெரும் பயணம்

ஆசிரியர் கண்ணதாசன் எழுதும் 'பெரும் பயணம்' காவியமும் காரை முத்துப்புலவரின் இலக்கியத்தில் **காதலும்** சேலத்திலிருந்து ஆசிரியரால் அனுப்பப்பட்டு, தபாலில் காலதாமதமாக வந்து சேர்ந்ததால் இந்த இதழில் வெளியிட முடியவில்லை. அடுத்த இதழில் கண்டிப்பாக வெளிவரும்.

அறிவிப்பு

இனி 'தென்றல்' பிரதி வாரமும் சனிக்கிழமை தோறும் வெளி வரும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாகத் தீவு!

இந்து மகா சமுத்திரத்தில், ஆஸ்திரேலியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையிலே வட்டத்தீவு என்று ஒரு தீவு இருக்கிறது. உலகத்திலே மனிதன் போய் வசிக்கமுடியாத தீவு இதுதான். இங்கே மிகப் பயங்கரகான பாம்புகளும் தேள்களும் ஏராளமா யிருக்கின்றன. இங்கேயுள்ள அத்தனை தினிசுப் பாம்புகள் உலகில் வேறெங்குமே கிடையாது. அவை ஆறடி முதல் எட்டடிவரையில் நீண்டிருக்கின்றன. சிவப்பு, வெளுப்பு, கறுப்புப் பட்டைகள் அவற்றின் உடலில் படர்ந்திருக்கின்றன. அவற்றின் விஷம் மகா கொடிது. மனிதனைக் கண்டால், இதர பாம்புகளைப்போல, இந்தப் பாம்புகள் பயப்பட்டு ஓடுவதில்லை. சீறி ஓடிவந்து, மனிதனை இவை தாக்குகின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டில், ஸ்பெயின் தேசத்துக் கப்பல் ஒன்று ஏராளமான பொக்கிஷத்தைச் சுமந்து கொண்டு இந்தத் தீவின் பக்கமாக வந்ததாம். புயலால் அந்தக் கப்பல் இந்தத் தீவில் மோதி மூழ்கியது. கப்பலிலிருந்தவர்கள் எப்படியோ பொக்கிஷத்தைக் கரை சேர்த்து, தாங்களும் இந்தத் தீவில் இறங்கினார்கள். அவர்களில் ஒருவர்கூட மீளவில்லை; அத்தனைபேரும் பாம்பு கடித்து மாண்டார்கள்.

அதற்குப் பின்னால், இந்த பொக்கிஷத்தைத் தேடியெடுப்பதற்காக கப்பல யாத்திரைக் கோஷ்டியார்கள் இத்தீவுக்குச் சென்றார்கள். ஆனால் பாம்புகளின் உபத்திரவம் தாங்காததால், எவரும் அங்கே தங்கமுடியாமல் திரும்பிவிட்டார்கள். இப்போது இன்னுமொரு யாத்திரைக் கோஷ்டி இங்கே செல்லப்போவதாக, ஒரு செய்தி வருகிற[illegible]

கோரத்தின் சக்தி

லண்டனிலே உள்ள தேசீயப் பிரபலஸ்தர்களின் சித்திரப் படக்காட்சிச் சாலையில் (நேஷனல் போர்ட்டிரெய்ட் காலரி) போய்ப்பாருங்கள். சென்ற 400 வருஷங்களில் இங்கிலாந்திலிருந்த பல துறைப் பிரபலஸ்தர்களின் படங்களையும் அங்கே காணலாம். பெரிய ஆர்ச் பிஷப்புகள், மகா பண்டிதர்கள், சிறந்த ராஜதந்திரிகள் முதலிய பலரும் பெரும்பாலும் கோரமாயிருப்பதை, அந்தப் படங்களிலே கண்டு ஆச்சர்யப்படுவீர்கள்.

கோர ரூபத்துக்கு, தர்ம சக்தி உண்டாகிறது. முதலாவதாக, கோர ரூபிக்குக் காதலிலே சுலபமான வெற்றி கிடைக்காது. ஆகையால், தனது திறமைகளைப் பெருக்கிக்கொண்டு ஆச்சர்யச் செயல்கள் புரிந்து வெற்றி பெற்று அதன் மூலம் தன் காதலியின் பாராட்டைப் பெற வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு உண்டாகிறது.

மேலும், கோர ரூபிக்குச் சக்தியும் இருக்குமானால், பெரும்பாலும் எப்போதும், ஜனங்கள் அவனிடம் சலுகை காட்டுகிறார்கள். அவனுக்குமேல் இருப்பவர்கள், அவனிடம் பொறுமை கொள்ளுவதில்லை; அவனை அசட்டை செய்வதுமில்லை. அழகான-ஆனால் சர்வசாதாரணமான-உருவத்தை விட, அசாதாரணமான உருவத்தையே ஜனங்கள் எப்போதும் [illegible]கு நினைவில் வைக்கிறார்கள். — ஆண்ட்ரி மராய்.

அடுத்த இதழில் கண்ணதாசன் எழுதும்

★ **அனார்கலி** தொடர் நாடகம் ஆரம்பமாகிறது ★

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/668

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிகமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை **நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)** Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை 134. SERANGOON ROAD, சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN St., கொழும்பு-11.

தந்தி: "ராஜா". போன் 268.A.

பணக்காரர் வீட்டு நகைகள்!

நகைகள் என்ருல் ஒன்று இரண்டு இருக்காது. விதத்திற்கு ஒரு மாதிரி, அழகுக்கொரு தினுசாக, கழுத்தில் போட கெண்ட சரம், பூச்சரம் என்று வைரத்திலே செய்த நகைகள்! காதுக்குத் தோடு, மூக்கிலே மூக்குத்தி, பெட்டகத்திலே வைத்துப் பாதுகாக்க நிக்கல்ட்டு, டாலர், மகரி போன்ற பெரிய பெரிய நகைகள்!

இவைகள் தான் யுத்த காலத்திலே ஒன்று பலமடங்காகி இவர்களை யெல்லாம் காப்பாற்றியது. நகைகளே பெரிய சேமிப்புத் தானே.

● ● ●

இதற்கு சிறந்த நம்பிக்கையான இடம் கோயம்புத்தூர், பி. ஏ. ராஜு செட்டியார் கடையென்ருல் மிகையாகாது!

வைரம், தங்கம், வெள்ளி நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் என்றும் கிடைக்கும் இடம்.....

Anand...

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்.

சுவர்ணமாளிகை.. கோயமுத்தூர்.

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher KANNADHASAN, 2, Shanmuga Mudali Street Madras-14.